பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 13 ஞாயிற்றுக்கிழமை (27~04~2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:152

### போராயுதங்களின் கண்காட்சி! படைப்பிரிவுகளின் அணிவகுப்பு!!

# பளையில் நாளை ஆனையிறவு வெற்றிப்பெருவிழா! வெற்றிக் கேடயங்களுடன் மக்கள் அணிதிரள்வர்!!

யாழ்ப்பாணம்,ஏப்.27

ஆனையிறவு இராணுவப் பெருந் தளத் தகர்ப்பு மற்றும் தீச்சுவாலை படைநடவடிக்கை முறியடிப்பு ஆகிய வரலாற்றுச் சம்பவங்களின் வெற்றியைக் குறிக்கும் பெருவிழா நாளை பளையில் பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் நடைபெறவிருக்கிறது.

குடாநாட்டிலும், வன்னிப் பெருநிலப் பரப்பிலும் இருந்து பெருந்திரளான மக்கள் இந்த விழாவில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

பளையில் ஒன்றுதிரளவுள்ள மக்களுக்கான பொதுவசதிகள் உட்பட சகல வசதிகளும் அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பளைப்பிரதேசத்தில் ஆனையிறவுத் தாக்குதலுக்கு ஆட்லறித்தளமாகப் படையினரால் பயன்படுத்தப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சிறப்பு அரங்கில் பிற்பகல் 4.30 மணிக்கு விழா ஆரம்பமாகும். அதற்கு முன்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு வழங்குவதற்கான வெற்றிக்கேடயங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தும் வன்னியிலிருந்தும் அஞ்சல் ஓட்டமுறையில் பளைக்கு எடுத்துவரப்படும்.

யாழ்ப்பாண செயலகம் முன்பாக இருந்து நாளை முற்பகல் 10 மணிக்கு அஞ்சல் ஓட்டமாகக் கேடயம் எடுத்துச் செல்லப்படும். ஏ-9 வீதியில் சந்திகள் மற்றும் பொது இடங்களில் மக்கள் கூடிநின்று அஞ்சல் ஓட்ட வீரர்களுக்கு உற்சாகமளிப்பர்.

ஒவ்வொரு சந்திகளிலும் தரித்து நிற்கும் வீரர்கள் மாறி மாறி கேடயத்தைக் கொண்டுசெல்வர்.

தீச்சுவாலையைக் கையால் அணைக்கும் காட்சியை சித்திரிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கேடயம் மூன்றரையடி உயரமானது. தமிழீழ மாணவர் பேரவை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

வடமராட்சியில் இருந்தும் வெற்றிக கேடயம் பளைக்கு எடுத்துச் செல்லப்படவிருக்கின்றது.

வடமராட்சி வடக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கத்தினால் வழங்கப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டதால் ஏற்பட்ட நெருக்கடி;

# பிரதமரின் செயலர் பிரட்மன் நேற்று யாழ்ப்பாணம் வருகை

## பலாலியில் படையினருடன் சந்திப்பு இன்று செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்27

**சமாதானப் பேச்சுக்களை விடுதலைப் புலிகள் இடைநிறுத்தியதை அடுத்து ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைபற்றி அறிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார். இதற்காக அவரது பிரதம செயலர் பிரட்மன் வீரக்கோன் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளார்.**

**நேற்று அவர் பலாலியில் படை அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடினார். யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலை பற்றியும் உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்கள் குறித்தும் அவர் படை அதிகாரிகளுடன் விரிவாகப் பேசியதாகத் தெரியவந்தது.**

**இந்த நெருக்கடி நிலை குறித்த யாழ். மக்களின் கருத்தை அறிவதற்காக இன்று அவர் குடாநாட்டு பொதுமக்கள் பிரதிநிதிகளுடனும் புத்திஜீவிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.**

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வந்த பேச்சுக்களை இடைநிறுத்துவதாக விடுதலைப் புலிகள் அறிவித்ததை அடுத்து ஏற்பட்ட நெருக்கடி நிலை குறித்தே பிரட்மன் வீரக்கோன் ஆராயவுள்ளார்.

மக்களின் மீள் குடியமர்வு, புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாக இணகம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் காட்டப்படும் தாமதங்கள், புனர்வாழ்வுப் பணிகளுக்கான நிதி உதவிகள் வந்து சேர்வதில் அரசு அக்கறை காட்டாமை ஆகிய காரணங்களை முன்வைத்தே புலிகள் பேச்சை இடைநிறுத்தியிருந்தனர்.

புலிகள் தெரிவித்துள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் ஓர் அங்கமாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது செயலாளர் பிரட்மன் வீரக்கோனை யாழ்ப்பாணத்துக்கு அனுப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் புலனாய்வாளர் கொழும்பில் சுட்டுக்கொலை!

கொழும்பு,ஏப்.27

தெஹிவளையில் நேற்றிரவு 8 மணியளவில் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த தமிழ் நபர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தெஹிவளை பிப்பிலியானை வீதியில் வசித்துவந்த லிங்கசாமி தேவராசா என்பவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

பிரஸ்தாப நபர் தனது மனைவி மகளுடன் தெஹிவளையில் உள்ள

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மதுரை ஆதீன குருமகாசந்நிதானம் 6ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம்,ஏப்.27

கொழும்பில் நடைபெறவிருக்கும் 2 ஆவது உலக இந்து மாநாட்டில் பங்குபற்றுவதற்காக வருகைதரும் மதுரை ஆதீன குருமகா சந்நிதானம் யாழ்ப்பாணத்துக்கும் வருகைதந்து யாழ். மக்களுக்கு ஆசி வழங்கவிருக்கின்றார்.

மதுரை ஆதீனத்தின் 292 ஆவது குருமகா சந்நிதானமாகிய ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளே இந்து மாநாட்டில் கலந்துகொள்ள எதிர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வாகனங்களில் சமாந்தரமாக செல்வோர் மீது நடவடிக்கை

### அடுத்த வாரம்முதல் தீவிரமாக அமுல்

யாழ்ப்பாணம்,ஏப்.27

குடாநாட்டில் அடுத்த வாரத்தில் இருந்து சகல இடங்களிலும் சமகாலத்தில் வீதிகளில் சமாந்தரமாக செல்பவர்கள் மீது தீவிர சட்ட நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றது.

அந்தந்தப் பிரதேச பொலீஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் பிரதான சந்திகள் மற்றும் மூலைமுடுக்குகளில் நின்று சமாந்தரமாக சைக்கிளில் அல்லது மோட்டார் சைக்கி

(14 ஆம் பக்கம் பார்க்க)



**தந்தை செல்வாவின் 26ஆவது நினைவுதின நிகழ்வில் தந்தையின் சிலைக்கு தமிழகப் பேராசிரியர் அறவாணன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் காட்சி.**

### தமிழ் பேசும் மக்களின் அரசியல் வேணவாவை நிறைவேற்ற

# தேசிய எழுச்சிப் பேரவை யாழ்.குடாநாட்டில் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.27

தமிழ்பேசும் மக்களின் அரசியல் வேணவாக்களை நிறைவேற்ற தேசியத் தலைவர் வே.பிரபாகரன் வழிகாட்டலில் மக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்பவற்றை மீளக் கட்டியெழுப்பி, உறுதியான அரசியல் நெறிமுறைகளில் நின்று, பொருத்தமான [illegible] முன்னெடுக்க தேசிய எழுச்சிப் பேரவை ஒன்று யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்படவுள்ளது.

இந்தப் பேரவையின் ஆரம்பக் கூட்டம் யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியல் துறைப் துணைப்பொறுப்பாளர் செம்மணன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி எழுச்சிப் பேரவை குறித்து விளக்கமளித்தார்.

இப்பேரவை அமைக்கும் திட்டம் தேசியத் தலைவரின் எண்ணக்கருவில் இருந்து உருவானது. இதனை சிறந்த முறையில் உருவாக்கி மக்கள் பணி

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் சுமுகநிலை பேண கண்காணிப்புக் குழு உதவி செய்யும்

கொழும்பு,ஏப்.27

வடக்கு - கிழக்கு நிலைமையை சுமுகமாக வைத்திருப்பதில் கண்காணிப்புக்குழு இரு தரப்புக்கும் உதவி வரும் என்று கண்காணிப்புக்குழு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இருதரப்பினரும் யுத்தநிறுத்தத்தை ஒழுங்காகக் கடைப்பிடித்து வருகின்றனர். தொடர்ந்தும் யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்படுவதை கண்காணிப்புக்குழு கண்காணிக்கும்.

எந்தவித பிரச்சினைகளையும் தீர்த்துவைப்பதிலும் நிலைமையை சுமுகமாக வைத்திருப்பதிலும் கண்காணிப்புக்குழு இருதரப்பினருக்கும் உதவி வரும்.

உடன்படிக்கையில் உள்ள விடயங்களை நிறைவேற்றுவதுடன் தங்கள் கடற்படைப் பிரிவுகளின் நடவடிக்கைகளுக்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கும் அண்மைய ஜப்பான் பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்டது.

எதிர்காலத்தில் உடன்படிக்கைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் சம்பவங்கள் கடற்பகுதியில் இடம்பெறாமல் தடுக்கும் நோக்கத்துடன் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

எம்மால் அண்மையில் வெளியிடப்பட்ட முன்மொழிவுகள் குறித்து காரசாரமான விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது கடற்புலிகளின் செயற்பாடு குறித்து உடன்படிக்கையில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்று புலிகள் வாதாடினர்.

இருதரப்பினரும் தத்தமது கடற்படையினரின் பலத்தைப்பேண அவரவருக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் பயிற்சிகளில் ஈடுபடமுடியும்.

கடற்புலிகளும் கடற்படையினரும் கடலில் பயிற்சிகளை மேற்கொள்ளும போது கரையோரங்களில் வசிக்கும் மீனவர்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்காத வகையில் அதற்கென ஒதுக்கப்பட்ட கடற்பரப்பிலேயே பயிற்சிகளில் ஈடுபடவேண்டும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன படிக்கையானது இரு தரப்பினதும் உந்துதலின்பாற்பட்டதாகும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் கட்டுப்பாடுகளைப் பேணுவதில் இருதரப்பும் தமது கடற்படைப் பிரிவுகளின் நடவடிக்கைகள் தொடர்பாக பொருத்தமான ஒழுங்குமுறைகளை செயற்படுத்துவதன் மூலம் கடலில் வன்முறை சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்க முடியும்.

அண்மை நாள்களாக கண்காணிப்புக்குழு விவாதத்துக்கான முன்வரைவு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தது. இது தொடர்பாக பல சர்ச்சைக்குரிய கருத்துக்கள் பல்வேறு முனைகளில் இருந்து எழுந்துள்ளன.

கடற்புலிகளை ஒரு தனியான கடற்படை அலகாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என எம்மால் வெளியிடப்பட்ட முன்வரைபில் பரிந்துரைக்கப்பட்டது. அது தற்போது ஒரு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காக்கவேண்டிய கடப்பாடு கடற்படையினருக்கு உண்டு. அத்தோடு, இராணுவச் சமநிலை என்பது தற்போது நடப்பில் இருக்கும் உடன்படிக்கை சரத்துக்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

இருதரப்பும் தத்தமது படைக்கட்டமைப்பையும் அதன் சமநிலையையும் பேண வேண்டியதன் அவசியம் ஏற்றுக கொள்ளப்பட்டது.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-4)

# தந்தை செல்வா நினைவு தினம் குடாநாட்டில் நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.27

தந்தை செல்வாவின் 26 ஆவது நினைவு தினம் யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத் தூபியில் நேற்றுக் காலையில் நினைவு கூரப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இந்தியாவின் 'மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின்' முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கா.பா.அறவாணன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், நல்லை ஆதீன முதல்வர், நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் உட்படப் பலர் யாழ்.நகர மத்தியில் அமைந்துள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் அமைந்துள்ள தந்தையின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

பிற்பகலில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நிகழ்வுகள் இடம்பெற்றன. தந்தை செல்வாவின் உருவப்படத்துக்கு தமிழர் விடுதலைக கூட்டணியின் செயலாளர் நாயகமும் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து நினைவு உரைகள் இடம்பெற்றன. இந்தியாவின் திருநெல்வேலி மாவட்டம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கா.பா. அறவாணன் 'காந்திய நெறிகளும் தந்தை செல்வாவின் அரசியல் இலட்சியமும்' எனும் பொருளில் நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

யாழ்பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி சி.க.சிற்றம்பலம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுவின் உபதலைவருமான மாவை சேனாதிராசா ஆகியோரும் உரையாற்றினார்கள். இறுதியாகக் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்கேசிவாஜிலிங்கம், என்.ரவிராஜ், விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள், கூடடணி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

தந்தை செல்வா நினைவுதின நிகழ்வுகள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்பு தலைமையகத்திலும் நேற்றுக் காலை 8 மணிமுதல் இடம்பெற்றன.

கூட்டணியின் மத்தியகுழு உறுப்பினரும் வவுனியா மாவட்ட செயலாளருமான அ.பு.மூர்த்தி தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் தந்தை செலவாவின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலியுரைகளும் நிகழ்த்துபட்டன.

(ம-3-8-10)

# சார்ஸ் நோயைக் கண்டறிய நவீன கருவிகள் பொருத்தப்படும்

கொழும்பு,ஏப்.27

இலங்கைக்குள் சார்ஸ்நோய் பரவுவதைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாட்டுக்குள் புகும் பாதைகளான விமானநிலையம், துறைமுகம் ஆகியவற்றில் நோயைக கணடறியத்தக்க நவீன கருவிகள் பொருத்தப்படவுள்ளன.

இந்தவகையான கருவிகளை சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

சார்ஸ் நோய் தடுப்பதற்கான அமைச்சரவை உபகுழுவின் கூட்டத்தில் மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் நேற்று முன்தினம் நடந்த உபகுழுவின் கூட்டத்தில் வெளிவிவகார அமைசசர் டிரோன் பெர்னாண்டோ, உல்லாசப பயணத்துறை அமைச்சர் காமினி லொக்குகே மற்றும் வெளிவிவகார, சுகாதார, உல்லாசத்துறை, விமானத்துறை ஆகிய அமைச்சுக்களின் அதிகாரிகளும் குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

'சார்ஸ்' நோய் இலங்கைக்குள் ஊடுருவாமல் தடுக்கவேண்டிய வழிமுறைகள் குறித்து கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

விமானநிலையம் மற்றும் துறைமுகங்களில் விசேட வைத்தியர்களை நியமித்து, தீவிர கண்காணிப்புக்களை மேற்கொள்வது என்றும் -

உடல் வெப்பத்தை அறியக்கூடிய நவீன கருவிகளை சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்து விமானநிலையங்களிலும் துறைமுகங்களிலும் பொருத்துவது என்றும் - முடிவு செய்யப்பட்டுள்ளது.

'சார்ஸ்' நோய் பரவும் நாடுகளில் இருந்து இலங்கை வருபவர்களுக்கு விஸா வழங்கமுன்னர் அவர்களை முன் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்று சகல நாடுகளின் தூதரகங்களுக்கும் அறிவுறுத்தல் விடுவது என்றும் தீமானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குள் வரும் பயணிகளில் யாரும் நோய்ப் பாதிப்புக்கு உள்ளானால் அவர்களை உடன் [illegible] நோய் தடுப்பு வைத்தியசாலைக்கு அனுப்பிப் பராமரிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

(ம-3)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஏப்.27

யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்திவரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் சங்குவேலி ஐக்கிய விளையாட்டுக்கழகமும் சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.(ம-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப.27

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களின் அணிகளுக்கிடையே நடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்திலும் ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயத்திலும் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ஆண்கள் - ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி எதிர் பருத்தித்துறை பிரதேச செயலக அணி.

★கரவெட்டி பிரதேச செயலக அணி எதிர் நல்லூர் பிரதேச செயலக அணி.

★சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி எதிர் வேலணைப் பிரதேச செயலக அணி.

★மருதங்கேணி பிரதேச செயலக அணி எதிர் நெடுந்தீவு பிரதேச செயலக அணி.

★சாவகச்சேரி பிரதேச செயலக அணி எதிர் உடுவில் பிரதேச செயலக அணி.

★யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி எதிர் சங்கானை பிரதேச செயலக அணி.

இச்சுற்றுப்போட்டியின் இரண்டாம் சுறறு ஆட்டங்களில் உடுவில் பிரதேச செயலக அணியும் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன.

★பெண்கள் - சாவகச்சேரி பிரதேச செயலக அணி எதிர் உடுவில் பிரதேச செயலக அணி.

★யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி எதிர் சங்கானை பிரதேச செயலக அணி.

★மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி எதிர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி.

★சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி எதிர் வேலணை பிரதேச செயலக அணி.

★கரவெட்டி பிரதேச செயலக அணி எதிர் நல்லூர் பிரதேச செயலக அணி.

★ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி எதிர் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு அணி.

[illegible] தெல்லிப்பழை பிரதேச செயலக அணிகள் பங்கேற்க உள்ளன. (ஓ-5-86)









தந்தை செல்வாவின் 26 ஆவது நினைவுதின நிகழ்வுகள் நேற்று மாலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றன. தமிழக அறிஞர் கா.பா.அறவாணனும், கூட்டமைப்பு செயலாளர் நாயகம் இரா சம்பந்தன் மங்களவிளக்கேற்றுவதை முதலாம், இரண்டாம் படங்களிலும் -

பங்குகொண்டவர்களில் ஒரு பகுதியினரை அடுத்த படத்திலும் -

அறவாணனுக்கு இரா சம்பந்தன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதை அடுத்துள்ள படத்திலும் - காணலாம். *(படங்கள்: தேவா)*

# வாதரவத்தை விக்னேஸ்வராவுக்கு அமைச்சினால் நூலகம் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.27

வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் சமூகசேவைகள் அமைச்சினால் நூலகம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து வருகைதந்திருந்த அமைச்சின் அதிகாரிகள் இதனை அமைததுக் கொடுத்ததுடன் நூலகத்துக்குத் தேவையான நூல்கள் மற்றும் தளபாடங்களையும் வழங்கியுளளனர்.

நூலகத்தில் பணியாற்றுவதற்கென ஒருசிலரைத் தெரிவுசெய்து அவர்களுக்கு இருநாள் பயிற்சியும் வழங்கியுள்ளனர்.

இதேவேளை - சமூகசேவைகள் அமைச்சினால் மக்கள் நலன்புரிச் சங்கத்துக்கு 4 தையல் இயந்திரங்களும் பூவேலை செய்யும் ஒரு சிக்சாக் (ZIGZAG) இயந்திரமும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இவற்றின் மூலம் யாழ்.மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள யுவதிகளைத் தெரிவு செய்து தையல் பயிற்சியும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. சமூக சேவைகள் அமைச்சின் உதவியுடன் இந்தப் பயிற்சிகளை மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் மேற்கொள்ளவுள்ளன.

(ம-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தாத்தில் ஏவுகணைக் களஞ்சியம் வெடித்துச் சிதறி பெரும் அனர்த்தம்

## 40இற்கும் மேற்பட்டோர் பலி
## சதாம் படைகள் கைவரிசை?

பக்தாத் ஏப்ரல்,27

**பக்தாத்தின் தெற்குப் பகுதியில் அமைந்திருந்த அமெரிக்கப் படைகளின் பெரும் ஆயுதக் களஞ்சியம் ஒன்றின் மீது நேற்றுக்காலை இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் பேரழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆயுதக் களஞ்சியம் வெடித்துச் சிதறியதில் நாற்பதிற்கும் அதிகமான சிவிலியன்கள் உயிரிழந்துவிட்டதாக அஞ்சப்படுகிறது.**

பக்தாத்தின் தெற்குப் பகுதியில் நேற்று அடுத்தடுத்து பல குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

ஆயுதக்களஞ்சியம் ஒன்றில் திடீரெனத் தீ பரவியதால் அங்கிருந்த குண்டுகள் வெடித்துச் சிதறின என்று அறிவிக்கப்படுகிறது. ஈராக்கில் சதாமின் படைகளிடம் இருந்து கைப்பற்றிய ஆயுதங்கள், வெடிபொருள்களை அமெரிக்கப் படைகள் பக்தாத்தின் பல இடங்களில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கின்றன. அந்தக் களஞ்சியங்களில் ஒன்றிலேயே திடீரென தீ ஏற்பட்டது.

தரையில் இருந்து தரைக்கு ஏவப்படும் குறுந்தூர ஏவுகணைகள் உட்பட 80 இற்கும் அதிகமான ஏவுகணைகள் இந்தக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன என்று கூறப்படுகின்றன. இந்தக் களஞ்சியத்தை நோக்கி வெகு தொலைவில் இருந்து சதாமின் படைகள் ரொக்கெட் ஏவி தாக்கியதாக முதலில் வெளியான செய்திகள் தெரிவித்தன. களஞ்சியத்தில் தீ பிடித்ததும் ரொக்கெட்டுகள் சீறிப்பாய்ந்து வெடிக்கத் தொடங்கின. இதனால், முழு பக்தாத் நகரமும் அதிரத் தொடங்கியது. அமெரிக்கப் படைகள் தங்கள் மீது தாக்குதல் தொடுப்பதாக எண்ணிக்கொண்ட பொதுமக்கள் ஆத்திரத்துடன் வீடுகளை விட்டு வெளியே ஓடிவந்து அவலக்குரல் எழுப்பினர். அருகில் இருந்த வீடுகளில் வசித்த பொதுமக்கள் குண்டுச் சிதறல்களினால் படுகாயமடைந்தனர். காயமடைந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் அம்புலன்ஸ்கள் மூலம் ஆஸ்பத்திரிகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.



ஆயுதக் களஞ்சிய அனர்த்தத்தில் காயமடைந்த அப்பாவி ஈராக்கியர்கள்.

இந்த அனர்த்தத்தில் 40 இற்கும் மேற்பட்ட சிவிலியன்கள் உயிரிழந்திருப்பதாக உள்ளூர் மருத்துவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அமெரிக்கப் படைவீரர்கள் பலரும்கூட காயமடைந்துள்ளனர்.

பக்தாத் நகரினுள் இன்னமும் ஒளிந்திருக்கின்ற சதாம் ஆதரவுப் படையினர் இந்தக் களஞ்சியங்களை இலக்கு வைத்து தாக்குவதற்கு முயன்று வருகின்றனர் என்றும் -

அவர்கள் நடத்திய ஒரு தாக்குதலிலேயே ஆயுதக்களஞ்சியம் தீப்பற்றி எரிந்ததாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

களஞ்சியத்தை எதிரிப் படைகளே தாக்கியதாக அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளபோதிலும் களஞ்சியம் எவ்வாறு தாக்கப்பட்டது என்பது தொடர்பாக முரணான தகவல்கள் வெளியாகிக் கொண்டிருந்தன.

இந்தச் சம்பவத்தில் நான்கு பெண்களும் ஒரு குழந்தையுமே உயிரிழந்தனர் என்று முதலில் அறிவிக்கப்பட்டது.

தாக்கப்பட்ட களஞ்சியத்தில் பல மணி நேரங்களின் பின்னரும் குண்டுகள் தொடர்ந்து வெடித்துக்கொண்டிருந்ததாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

பக்தாத்தின் தென்பகுதியை தாங்கள் பூரண கட்டுப்பாட்டின கீழ் கொண்டுவர கூட்டணிப்படைகள் தீவிர முயற்சி எடுத்து வருகின்றபோதும் அங்கு சதாம் ஆதரவுப் படைகள் ஒளிந்திருந்து செயற்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

நேற்று நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்கள் பக்தாத்தில் பாதுகாப்புக்கு இன்னமும் அச்சுறுத்தல் இருப்பதையே காட்டுவதாக அங்குள்ள பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

சிவிலியன்கள் வாழும் பகுதியில் ஆபத்தான வெடிப்பொருள்களை களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமையே இந்த அனர்த்தத்துக்கு காரணம் என்று குற்றச்சாட்டுகள் எழுந்திருக்கின்றன. ஆத்திரமுற்ற ஈராக்கியர்கள் பலர் நேற்று தெருக்களில் இறங்கி அமெரிக்கப் படைகளுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். (ஐ)

## உளவுத்துறை முன்னாள் அதிகாரி கைது!

ஈராக் உளவுத்துறை முன்னாள் உயர் அதிகாரி பரூக் ஹிஜாஸி கைது செய்யப்பட்டார்.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் தந்தையும், முன்னாள் அதிபருமான ஜோர்ஜ் புஷ்ஷை கடந்த 1993 ஆம் ஆண்டு குவைத்தில் படுகொலை செய்ய நடந்த சதியில் இவருக்கு முக்கிய பங்கு உண்டு. (ஐ)

## தலிபான்களின் தாக்குதலில் 2 அமெரிக்கப் படையினர் பலி!

காபூல்,ஏப்.27

கிழக்கு ஆப்கானிஸ்தானில் தலிபான் படைகளுடன் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் அமெரிக்க இராணுவ வீரர்கள் இருவர் உயிரிழந்தனர். பலருக்குக் காயங்கள் ஏற்பட்டன.

பாகிஸ்தான் எல்லையோரமாக உள்ள சிக்கின் இன் பாதியா மாகாணத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஆப்கானிஸ்தானில் தலிபான் போராளிகள் மீண்டும் அணிசேர்ந்து தாக்குதல்களைத் தொடங்கியிருப்பதையே இது காட்டுவதாகக் கூறப்படுகிறது.

சுமார் இருபது போராளிகள் அடங்கிய தலிபான் குழு இந்தத் தாக்குதலை நடத்தியது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கான் அரசுப் படைவீரர் ஒருவரும் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டார். (ஐ)

## சார்ஸ் நோயினால் இதுவரை கனடாவில் 16 பேர் மரணம்

ரொரன்டோ,ஏப்.27

கனடா நாட்டில் சார்ஸ் நோய்க்கு மொத்தம் 16 பேர் பலியாகிவிட்டனர். அந்நாட்டில் மொத்தம் 327 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தோர் அனைவரும் தலைநகர் ரொரன்டோவைச் சேர்ந்தவர்கள்.

வான்குவர் நகரில் வந்திறங்கிய சீன ஏயார் லைன்ஸ் விமானத்தில் இருந்த பயணிகளில் சிலருக்கு சார்ஸ் பாதிப்பு இருந்தது கண்டறியப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரொரன்டோ நகருக்கும், சீனாவின் ஷியாங்ஸி மாகாணத்துக்கும் முக்கியமில்லாத பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

சார்ஸ் நோய் பரவுவதைத் தடுக்கவும் பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் இவ்வாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என்று அந்த அமைப்பு தெரிவித்தது. (ஐ)

# உலகை பாடாய்ப்படுத்தும் சார்ஸ் இதுவரை ௨௬௩ பேர் மரணம்!



கொஞ்சம் சளி பிடித்து மூக்கைச் சீந்தினால் போதும்... என்ன உனக்கு சார்ஸ்சா? என்று உடனிருக்கும் நண்பர்கள் கேலி செய்கிறார்கள்.

இப்போது கேலியாக தெரியும் இந்த விஷயம் விரைவில் உலகையே உலுக்கும் விஷயமாக மாறி விடுமோ என்ற அளவுக்கு நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது.

சீனாவில் தோன்றிய இந்த நோய் ஹொங்கொங், சிங்கப்பூர், தாய்லாந்து என பரவிய போது கூட நோய் அங்கேயே சுற்றி நின்று போகும் என்று தான் எதிர்பார்த்தார்கள்.

ஆனால், 'சார்ஸ்' கண்டம் விட்டு கண்டம் தாவி உலகின் 28 நாடுகளை எட்டிப்பிடித்து விட்டது.

எப்படியாவது தடுப்பு மருந்துகளை கண்டுபிடித்து விடுவார்கள். அதன் மூலம் நோயை கட்டுப்படுத்தி விடலாம் என்ற கனவும் தகர்ந்து விட்டது. உலகம் முழுவதும் உள்ள ஆராய்ச்சியாளர்கள் இரவு பகலாக ஆய்வு செய்தும் இதுவரை எந்த தடுப்பு மருந்தையும் கண்டுபிடிக்கவில்லை. ஏற்கனவே வைரஸ் தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் மருந்துகளைத்தான் இதற்கும் பயன்படுத்தி நோயாளிகளை ஓரளவு குணப்படுத்தி வருகிறார்கள்.

ஆனால், அதையும் மீறி 'சார்ஸ்' பாதித்தவர்கள் செத்து மடிந்து கொண்டிருக்கிறார்கள். சீனாவில் தினமும் 10 பேருக்கு மேல் சாகிறார்கள். அதே நிலைமைதான் ஹொங் கொங்கிலும் நிலவுகிறது.

சீனாவில் இதுவரை 115 பேர் இறந்துள்ளனர். 2422 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஹொங்கொங்கில் 115 பேர் இறந்துள்ளனர். 1488 பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அடுத்ததாக சிங்கப்பூரில் 19 பேரும், கனடாவில் 15 பேரும் பலியாகி இருக்கிறார்கள்.

ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா என அனைத்து கண்டங்களிலுமே சார்ஸ் பரவிவிட்டது.

இந்தியாவையும் 'சார்ஸ்' விட்டு வைக்கவில்லை. புனாவில் ஸ்டான்லி டிசில்வா என்ற முதல் நோயாளி தென்பட்டார். இப்போது இந்தியாவில் 4 பேரை 'சார்ஸ்' தாக்கி இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஸ்டான்லியை காரில் அழைத்து சென்ற டிரைவருக்கும் தற்போது 'சார்ஸ்' நோய் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இந்தியாவில் வெளிநாட்டு விமானங்கள் வந்து இறங்கும் அனைத்து விமான நிலையங்களும் தீவிரமாக கண்காணிப்படுகின்றன. நோய் மேலும் பரவிவிட்டால் தகுந்த முறையில் சிகிச்சை அளிக்க முன்னேற்பாடுகள் அனைத்து மாநிலங்களிலும் செய்யப்பட்டுள்ளன.

'சார்ஸ்' மனிதர்களை மட்டும் தாக்கவில்லை. பொருளாதாரத்தையும் கடுமையாக தாக்கி உள்ளது. இதன் பாதிப்பு அதிகமாக உள்ள சீனா, ஹொங் கொங், சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, கனடா ஆகிய நாடுகளில் பொருளாதாரம் கடும் வீழ்ச்சியை சந்தித்து உள்ளது. இந்த நாடுகளில் இருந்து பொருள்களை இறக்குமதி செய்வதை பல நாடுகள் நிறுத்திவிட்டன. இதனால் உற்பத்தி செய்த பொருள்களை சந்தைப்படுத்த முடியாமல் இந்த நாடுகள் தவிக்கின்றன. பல நாடுகள் இங்கு வரும் விமான சேவைகளையும் நிறுத்திவிட்டன. இதனால் வர்த்தக தொடர்பும் நின்று போய்விட்டது.

இந்தியாவிலும் பொருளாதார பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்திய அரசுக்கு சொந்தமான ஏயார் இந்தியா விமானங்களில் பயணிகள் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. வெளி நாடு செல்லும் விமானங்களில் பாதி அளவே பயணிகள் இருக்கிறார்கள். இதனால் ஏயார் இந்தியா இதுவரை ரூ.7 கோடி நஷ்டத்தை சந்தித்து உள்ளது. இந்த நிலையில் சீனா, ஹொங் கொங், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு விமான சேவையை நிறுத்தி விடவும் ஏயார் இந்தியா ஆலோசித்து வருகிறது.



அது போல வெளிநாட்டு பயணிகள் வருகை குறைந்து விட்டதால் ஹோட்டல் தொழிலும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது. டில்லி, மும்பை போன்ற நகரங்களில் வெளிநாட்டு பயணிகள் தங்குதல் 60 சத வீதம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

G.C.E (O/L) முடித்து விட்டீர்களா!
இதோ கணனித்துறையில் உங்கள் தொழில்துறையை ஆரம்பியுங்கள்
★ MS OFFICE ★ GRAPHIC DESIGN ★ WEB DESIGN ★ INDIVIDUAL SUBJECTS
சர்வதேச தரத்திலான விளக்கங்கள், வகுப்புகள் விரைவில் ஆரம்பம்.
LOTUS COMPUTER MANAGEMENT SYSTEMS
Ramalingham Rd, Chavacachcheri. (பழைய A.G.A கந்தோர் முன்பாக)
யாழ். – கொழும்பு – யாழ். விமானசேவைகளும் ஒழுங்குபடுத்தலாம்.
(17220)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூசயன்ஸ் அக்கடமி
நெல்லியடி
PAPER CLASS
A/L 2004
இரசாயனம்
Mr.அன்பு (17224)

நியூசயன்ஸ் அக்கடமி
நெல்லியடி
O/L Day CLASS
சகல
பாடங்களும்
ஆரம்பமாகிவிட்டது.
(17226)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு
14 - 08 - 1934



மறைவு
29 - 03 - 2003

## வைத்தி சின்னையா

என்ன மாதவம் செய்தோம் யாம்
தந்தையாய் எமக்கு நீர் வாய்த்திட
அன்புடன் எம்மை அணைத்தீர்
புன்முறுவல் பூத்து புகழுடன் நாம் வாழ
நன்னெறி பகிர்ந்து நல்வழி காட்டினீர்
இப்போ துன்பத்தில் எம்மைத் துடிக்க விட்டு
மின்னலாய் மறைந்தீர் என்செய்வோம்?

29.03.2003 அன்று அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு நேரில் வந்து கலந்து கொண்டவர்களுக்கும் மலர்வளையம் வைத்து இறுதியாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேச, தபால் என்பவற்றின் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் புரிந்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

அத்துடன் அந்தியேட்டி கிரியைகளிலும் நாளை (28.04.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பூசையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி: நேசம்மா
பிள்ளைகள்:
ரகுநாதன், ஜெயநாதன் (ஜேர்மன்),
ரவீந்திரநாதன் (சுவிஸ்),
உதயசந்திரிகா (ஜேர்மன்),
உதயசாந்தி (ஜேர்மன்).

சாந்தி தொலைத்தொடர்பு நிலையம்.
*சங்கரத்தை வீதி,*
*நவாலி வடக்கு.* (17094)

# ஓராண்டு நினைவலைகள்




## அமரர் சின்னப்பு நல்லதம்பி

மண்மகிழ 14-05-1928 — கண்நெகிழ 09-05-2002

ஆயிரம் ஆயிரம் எண்ணக் கோலங்கள்
ஆறாத துயரின் மாறாத அலைகள்
மேலாக நின்று கடமைகள் செய்தோம்
மேன்மையாய் வாழ்ந்திடுக ஈசன் அடியில்
ஓராண்டு கழிந்தது தங்கள் நினைவில்
உள்ளம் குமுறுது உங்கள் பிரிவில்
தாளாமல் வாழ்ந்து தவித்துத் துடிக்கின்றோம்
தந்தையே! சாந்தி பெறுக! பெறுக!

'செல்வகிரி'
மீசாலை வடக்கு;மீசாலை. (17259)
- குடும்பத்தினர்.


கெனன் ஷார்ப்
போட்டோ கொப்பி மெஷின்கள்


உதிரிப்பாகங்கள்
மற்றும் பழுதுபார்த்தல்
• Drum • Upper Roller
• Blades Lamp (220V/ 110V)
• Bushings • Developer
• Conveyor Belts
டோனர் ரூ 600/= தொடக்கம்
உடன் பழுதுபார்ப்பு
சர்வீஸ் உத்தரவாதம்.
STARLIGHT ELECTRONICS
763, 2வது டிவிஷன்,
மருதானை வீதி, கொழும்பு-10.
Tel:693655, 681711. Fax :681712
E-mail:techsos@sltnet.lk
யாழ் பிரதேசத்திற்கு தொழில்நுட்ப நிபுணர்
நேரடி விஜயம் செய்வார்



க.பொ.த. உயர்தரம் 2003
பரீட்சைப் பெறுபேறுகளை
எதிர்நோக்குவோருக்கு ஒரு சந்தர்ப்பம்
இந்தியாவின் பெங்களூர்
பல்கலைக்கழகத்தில
B.Sc., B.B.m, B.C.A,
B.Com+Computer
பாடத்திட்டங்கள்
250இற்கும் மேற்பட்ட ஸ்ரீலங்காவைச் சேர்ந்த மாணவர்களுக்கு 31 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் கல்வி பயிலும் வசதி.
தற்போது 150 வரையிலான மாணவ, மாணவிகள் பெங்களூர் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாகியுள்ளனர்.
நாஷனல்
FIRST GRADE COLLEGE
கட்டணம் செலுத்தும் திட்டம் 2003 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை.
மேலதிக விவரங்களுக்கு மின் அஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்:
WWW.Nig College:Com.
திரு.குணவர்த்தன 01 811524
திரு.குணசேகரா 038 32657
Company Secretarial
Services pvt.Ltd.
285 c-1/1, Stanley Tillakaratne
Mawathe - Nugegoda.
T.P:- 01 - 851438.
(C-27510)


# பல்கலைக்கழக விரிவுரையாளரின் மோ.சைக்கிள் ஆயுதமுனையில் அபகரிப்பு

**அக்கரைப்பற்று - அம்பாறை வீதியில் சம்பவம்!**

நிந்தவூர்,ஏப்.27

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக விரிவுரையாளரான முஸ்லிம் ஒருவரின் மோட்டார் சைக்கிள் ஆயுத முனையில் இனம் தெரியாத இரு இளைஞர்களினால் அபகரித்துச் செல்லப்பட்டது.

அக்கறைப் பற்று - அம்பாறை பிரதான வீதியில் பட்டியடிப்பிட்டி பாலத்தடியில் கடந்த வியாழன்று இரவு 9.20 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இரு இளைஞர்கள் கைத்துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தி முஸ்லிம் விரிவுரையாளரின் ஒரு லட்சத்து பதினொராயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து விரிவுரையாளர் அக்கரைப்பற்று பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரீ.எம்.ஐ.எம். புஹாரி தீவர விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவின் கவனத்திற்கும் இதனைக் கொண்டுவந்துள்ளார்.(ஒ)

## நவாலி வடக்கில் காணித் தகராறில் வேலி எரிப்பு!

நீண்டகால காணித்தகராறால் கொட்டில் வீடும், வேலியும் எரிக்கப்பட்ட சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் நவாலி வடக்கில் இடம்பெற்றது. காணித் தகராறு காரணமாக ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து இரு தரப்பினரும் பரஸ்பரம் கல்வீச்சில் ஈடுபட்டதாகவும்-

பின்னர் கொட்டில் வீடொன்றும் வேலியும் எரிக்கப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-185)

# மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்

வழக்கு இலக்கம்: 2650

**பொறுப்பதிகாரி,**
பொலீஸ் நிலையம்,
சுன்னாகம்.
*- முறைப்பாட்டாளர் -*

**நல்லதம்பி கிருஷ்னானந்தன்,**
அலுக்கை,
அளவெட்டி.
*- எதிரி -*

## ஏலவிற்பனை அறிவித்தல்
## மரம் ஏலவிற்பனை 10.05.2003

மேற்கூறிய வழக்குடன் சம்பந்தப்பட்ட பின்வரும் அளவுகளைக் கொண்ட நாவல் மரக்குற்றிகள் இந் நீதிமன்ற 23.01.2003 ஆம் திகதிய கட்டளைக்கமைவாக பகிரங்க ஏலத்தில் விற்பனைக்கு விடப்படவுள்ளன என்பதை அறியத்தருவதோடு, அம்மரக்குற்றிகளை 10.05.2003 ஆம் திகதி அளவெட்டி சூசையப்பர் கோவிலுக்கு முன்பக்க ஒழுங்கையில் கிழக்குப்பக்கமாகவுள்ள நல்லதம்பி கிருஷ்னானந்தன் என்பவரின் வீட்டுக்குப் பின்பக்கமாக அமைந்துள்ள வெறும் காணியில் காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணிவரை பார்வையிடலாம்.

இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெறவிரும்பின் மல்லாகம் நீதிமன்றக் காரியாலயத்தில் 08.05.2003ஆம் திகதியும் 09.05.2003ஆம் திகதியும் பி.ப.3.00 மணிக்கும் 4.00மணிக்கும் இடையில் அறிந்துகொள்ள முடியும் என்பதை அறியத்தர விரும்புகிறேன்.

மரக்குற்றிகளின் விவரம்

1) 13 முளம் நீளமான குற்றி ~ 01
2) சுமார் 04 அடிக்கு மேற்பட்ட நீளமான குற்றிகள் ~ 05

ம.செல்வரத்தினம்
(பதிவாளர்)
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.
(17255)

உ
கணபதி துணை

# விவாஹ சோபனம்

பேரன்புடையீர்.

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சுபானு வருடம் சித்திரை மாதம் 15ஆம் நாள் நாளை (28.04.2003) திங்கட்கிழமை திரயோதசித் திதியும், உத்தரட்டாதி நட்சத்திரமும், சித்தயோகமும் சேர்ந்த பகல் 11.10 மணிமுதல் 12.22 மணி வரையுள்ள கடகலக்கின சுபவேளையில்

வண்.அமரர் ச.சண்முகசர்மாவின் புத்திரன்
சிரஞ்சீவி
**சிவகுமாரசர்மாவிற்கு**

எமது ஜ்யேஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி
**கீதாநந்தினியை**

கன்னிகாதான, மாங்கல்யதாரண, பாணிக்கிரகணம் செய்துவைக்க மட்டுவில், நெல்லியடி விநாயகன் திருவருள் துணையுடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று, சென்னை, அடையார், சாஸ்திரிநகர், 20, முதலாம் ஒழுங்கையிலுள்ள திருமகள் திருமணமண்டபத்தில் வைபவம் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் சுற்றஞ்சுழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*சமாவர்த்தனம்: 28-04-2003 திங்கள் காலை 6.00 மணி – திருமணமண்டபம்*

இங்ஙனம் தங்கள் நல்வரவைநாடும்:

ஸ்ரீமதி யோகம்பாள் சண்முகசர்மா,
4750,டுபிஸ்#104, மொன்றில்,
கியூபெக்,H,W,N, கனடா.

பிரம்மஸ்ரீ.கி.சதாசிவசர்மா - லலிதாம்பாள்
(சம்ஸ்கிருத பண்டிதர்)
"கீதாலயம்",மட்டுவில்,சாவகச்சேரி.

(17241)


CHNS
CEYLINCO HOME NURSING SERVICES
வீட்டில் இருக்கும் முதியோரை, நோயாளரைப் பராமரிக்கும் சேவை
உங்கள் உற்றார், உறவினரைப் பராமரிக்க
வீட்டில் ஒருவர் இல்லையே! என்ற கவலையா?
கவலையை விடுங்கள்
இதோ! தேசமானிய லலித் கொத்தலாவலையின் சேவைகளில் ஒன்றான பயிற்றுவிக்கப்பட்ட உதவித் தாதியர் நிறுவனம் உங்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டிக் காத்திருக்கிறது.
உடனே தொடர்பு கொள்ளுங்கள்.
முதலாவது மாடி,
175, [illegible] றோட்,
[illegible]
T.P.222-2310
சிலிங்கோ கூட்டுநிறுவனம்
சிலிங்கோ வீட்டுத் தாதிய
பராமரிப்புச் சேவை.
(17210)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# பந்து இப்போது அமெரிக்கா பக்கத்தில்!

அமெரிக்க தூதுவர் அஸ்லி வில்ஸ், தனது நாட்டின் வழமையான போக்கில் - பண்பில் - சர்வதேச பொலீஸ்காரன் தனத்தோடு, முன்வைத்த கருத்துக்களுக்கு நல்ல பதிலடி தந்திருக்கிறார் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

"அரசுடனான சமாதானப் பேச்சுக்களிலிருந்து புலகள் முற்றாக வெளியேறிவிடவில்லை; பேச்சிலிருந்து ஓடிவிடவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலமும், அதன் பின்னர் இடம்பெற்ற பல சுற்றுப் பேச்சுக்களின்போதும் காணப்பட்ட இணங்கங்களை - முடிவுகளை - அரசுக்கான கடப்பாடுகளை - நிறைவேற்றுவதற்கு அரசுக்கு கால அவகாசத்தை - இடைவெளியை - அளிப்பதற்காகப் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்தியிருக்கிறோம் அவ்வளவே. இப்படித் தெளிவுபடுத்தியிருக்கிறார் அன்ரன் பாலசிங்கம்.

இது ஒன்றும் புதுக்கருத்தல்ல. சமாதானப் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாகத் தெரிவித்து தமது இயக்கத்தின் சார்பில் அன்ரன் பாலசிங்கம் கடந்த வாரம் இலங்கை அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியிருந்த கடிதத்தின் விளக்கமே - தெளிவே - இந்தக் கருத்தாகும்.

சமாதானப் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்துகிறோம் எனப் புலிகள் அறிவித்ததும், ஏதோ புலிகள் பேச்சுக்களிலிருந்து ஓடிவிட்டார்கள் என்பது போலவும், சமாதான நடைமுறைகளையே குழப்பி, அதிலிருந்து விலகி, அதை முறித்துவிட்டார்கள் என்பது போலவும் அமெரிக்கத் தூதுவர் கூக்குரலிட்டார். அதுமட்டுமல்லாமல் புலிகள் அதைச் செய்தார்கள், இதைச் செய்தார்கள் என்று பட்டியலிட்டு புலிகளை வாங்கு வாங்கென்று வாங்கவும் அவர் பின்னிற்கவில்லை.

இபபோது புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் தமது இயக்கத்தின் நிலைப்பாட்டை மீண்டும் தெளிவுபடுத்தியிருக்கின்றார்; விஸ்தாரமாக விளக்கியிருக்கின்றார்.

இலங்கை அரசு தனது கடப்பாடுகளை நிறைவு செய்யவும், இணக்கம் காணப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்தவும் காலஅவகாசமும், இடைவெளியையும் வழங்கியிருப்பதாக பாலசிங்கம் தெட்டத்தெளிவாக விவரித்திருக்கின்றார்.

ஆக, அமெரிக்கா தன்னை, இலங்கை அரசு - தமிழ் மக்கள் (தமிழ் மக்களின் பிரதிநிதிகளான புலிகள்) ஆகிய இரு தரப்புக்கும் இடையில் ஏற்றுக்கொள்ளத்தக்க - நியாயமான கண்ணோட்டமுள்ள - நடுநிலையாளராக உலகுக்குக் காட்டிக் கொள்வது, தனது மதிப்புக்கு உரியது எனக் கருதுமானால், அன்ரன் பாலசிங்கம் தெளிவுபடுத்தியுள்ள விடயத்திலும் தனது நடுநிலைப்போக்கை வெளிப்படுத்தும் விதத்தில் கருத்துக்களை இப்போது முன்வைக்கவேண்டும்.

புலிகள் கொடுத்த இடைவெளியை - கால அவகாசத்தை - உரிய முறையில் பயன்படுத்தி, நீங்கள் செய்யவேண்டிய கடப்பாடுகளை நிறைவு செய்யுங்கள் என்று இலங்கை அரசுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்கவேண்டும்.

அதைவிடுத்து "புலிகள் வன்செயல்களையும், பயங்கரவாதத்தையும் கைவிடுவதாகப் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்" என்று பழைய பல்லவியை தொடர்ந்தும் பாடிக்கொண்டிருப்பதால் அர்த்தம் ஏதுமில்லை.

மதியுரைஞர் பாலசிங்கம் விளக்கியதுபோன்று, அரச பயங்கரவாதத்தில் இனப்படுகொலை அடக்குமுறையைப் பல சதாப்தகாலம் எதிர்கொண்டு, அந்த அனுபவத்தின் அடிப்படையில் தமது இருப்புக்கான உரிமை பேணப்படுமா என்று அஞ்சியிருக்கும் தமிழர் தரப்பை வெறுமனே சீண்டிப் பார்க்கும் விதத்தில் அமெரிக்காவும அதன் பேச்சாளர்களும் கருத்து வெளியிட்டுக் கொண்டிப்பது அர்த்தமற்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தமிழர்களை ஆழமாகப் பாதித்திருக்கும் நெருக்கடிகளையும் அவர்களது மன விரக்திகள், மனத்தாங்கல்களைப் புரிந்துகொள்ளாமல் அமெரிக்காவின் கொழும்புக்கான தூதுவர் அஸ்லி வில்ஸ் போன்றோர் எழுந்தமானமாகக் கருத்துக்கூறுவது ஏற்கனவே அரச பயங்கரவாதத்தால் அடக்கப்பட்ட ஓரினத்தை மேலும் அகௌரவப்படுத்தும் செயலன்றி வேறில்லை.

புலிகள் பேச்சுத் தொடர்பான தமது நிலைப்பாட்டைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியுள்ள தற்போதைய நிலையில் -

பேச்சு இடைநிறுத்தப்பட்டதாகக் கிடைத்துள்ள இந்த இடைக்காலத்தில், இதுவரையான சமாதான முயற்சிகளின்போது காலவரையறையோடு நிறைவேற்றத் தான் ஒப்புக்கொண்ட விடயங்களை நிறைவேற்றுமாறு இலங்கை அரசை வற்புறுத்துவதே இப்போது அமெரிக்காவின் பொறுப்பும் கடமையுமாகும்.

பந்து இப்போது அமெரிக்கா பக்கத்தில். அமெரிக்கா சரியாக - நீதியாக - நியாயமாக - பந்தை விளையாடுமா? அல்லது வழமைபோல் தனது முறையற்ற விளையாட்டை (Foul Game) தொடருமா?

# பருத்தித்துறையில் திட்டமிட்டபடி ஐஸ் தொழிற்சாலை நிறுவப்படும்

## சமாசச் செயலாளர் தகவல்

கரவெட்டி,ஏப்.27

ஏற்கனவே திட்டமிட்டபடி பருத்தித்துறையில் ஒன்பது லட்சம் ரூபா செலவில் பனிக்கட்டித் தொழிற்சாலை நிறுவப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன், பருத்தித்துறை நகர மையப்பகுதியில் இந்தத் தொழிற்சாலையை நிறுவவுள்ளது.

மேற்படி பனிக்கட்டித் தொழிற்சாலை நிறுவப்பட்டதும் பொது மக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்குரிய கடலுணவுகளைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் வெளியிடங்களுக்கு அவற்றை எடுத்துச்சென்று சந்தைப்படுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்று சமாசச் செயலாளர் எஸ்.சூரியகுமார் தெரிவித்தார்.

குறிப்பிட்ட தொழிற்சாலை நிறுவப்படுவதன் மூலம் விதவைகள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.
(எ-ரி-70)

## நாட்டு நடப்பு

### கிடக்கிறான் எட்டாம் வாட்டில்

அழகினில் இராமன் போல்வான்
ஆண்மையில் இராவணனை ஒத்தான்
தளர்விலா பக்தி மிக்கான்
தானதர்மத்தில் குமணன் போல்வான்
அளப்பெரு அழகன் அன்னான்
அமெரிக்க நாடு சென்றான்
பழகினான் போதை வஸ்து
பலமாதுவுடன் உறவு பூண்டான்
வளமெலாம் இழந்து போக
வாடினான் எய்ட்ஸ் நோய் மேவ
கிழவன் போல் உடல் மெலிந்து
கிடக்கிறான் எட்டாம் வாட்டில்.
- விகடகவி.

# கல்வித்தரம் வீழ்ச்சி அடைந்ததன் காரணத்தையறிந்து சீராக்கவேண்டும்

## மாகாண ஆளுநரின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ். குடாநாட்டின் கல்வித்தரம் தற்போது வீழ்ச்சி கண்டுள்ளது. இதற்கான காரணத்தை அறிந்து சீர்ப்படுத்தவேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தினார் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் செ.அமிர்தலிங்கம்.

நேற்றுமுன்தினம் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் வலயக் கல்விப் பணிப்பாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:-

யாழ். குடாநாட்டில் கல்வி நிலைமை என்றுமில்லாதவாறு இப்போது வீழ்ச்சிகண்டுள்ளது. இதற்கான காரணம் என்ன என்பது கண்டறியப்படவேண்டும். ஆளுநரும் இது தொடர்பாக என்னுடன் பிரஸ்தாபித்துள்ளார். எனவே குடாநாட்டின் கல்வி நிலையை மீண்டும் மேம்படுத்தி ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். அதற்கான வழி வகைகளை நாம் மேற்கொள்ளவேண்டும் - என்றார் அவர்.

யாழ்.குடாநாட்டில் தற்போது இயங்காமல் உள்ள பாடசாலைகளின் விவரம் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பான விவரங்களையும் கேட்டறிந்த செயலாளர், தொண்டராசிரியர்களின் தகைமைகள் மற்றும் விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

பாதுகாப்பு வலயத்தில் உள்ள பாடசாலைகள் மீளப் பெறப்பட்டு திருத்தித்தரப்படவேண்டும் எனவும் -

ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படவேண்டும் எனவும் - அவரிடம் கல்விப் பணிப்பாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

யாழ்.குடாநாட்டில் கல்வி அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தகுதியான முறையில் பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும் அபிவிருத்திப் பணிகள் செவ்வனே நடைபெறுகின்றனவா என்பதையும் செயலாளர் கல்விப் பணிப்பாளர்களிடம் கேட்டறிந்துகொண்டார்.

இக்கலந்துரையாடலில் ஐந்து வலயங்களின கல்விப் பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் உள்ளூராட்சித் திணைக்களத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் ஆளுநரின் செயலாளர் பங்குபற்றினார்.

பிரதேச சபைகளின் செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் அனைத்தும் மீளப்பெறப்படவேண்டுமெனவும், அவை ஒப்படைக்கப்படாத பட்சத்தில் சட்ட நடவடிக்கை மூலம் அவை பெறப்படும் எனவும், அவர் அங்கு தெரிவித்தார்.

பிரதேச சபைகளின் செயலாளர்கள் தமது பணிகளை மேற்கொள்வதற்கு வாகன வசதி செய்துதரும்படி கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பாக நான் ஆளுநருடன் பேசுவதாக ஆளுநரின் செயலாளர் அங்கு உறுதியளித்தார்.

ஆயுர்வேத வைத்தியசாலைகளை மீள இயக்குவது தொடர்பாகவும் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. (ஒ-8)

# யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த தரம் ஒன்று மாணவர்கள் 300 பேர் இலவச சத்துணவு பெறுவர்

## வலயக் கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த 12 பாடசாலைகளில் தரம ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலவச சத்துணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதிமுதல் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது என யாழ். வலயக் கல்விப் பணிப்பரளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

'எல்லோருக்கும் கல்வி' என்ற திட்டத்தின் அடிப்படையில் கல்வியமைச்சு வறிய மாணவர்களுக்கு இலவச சத்துணவு வழங்கும் திட்டத்தினை அறிமுகம் செய்துள்ளது என்றும் -

அதற்கு இணங்க முதற்கட்டமாக தரம் ஒன்று மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் நாளாந்தம் 15ரூபா பெறுமதியான சத்துணவு வழங்கப்படவுள்ளது என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி சத்துணவுத் திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள பாடசாலைகள் மற்றும் மாணவர் தொகை பற்றிய விவரங்கள் வருமாறு:-

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் - 15பேர், ஆவரங்கால் நடராஜராமலிங்க வித்தியாலயம் - 43 பேர், புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயம் - 14 பேர், வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம் - 12பேர்,

அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம் - 18 பேர், கொக்குவில் சி.சி.ரி.எம்.எஸ். - 7 பேர், யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரி 17 பேர், யாழ். சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை - 35 பேர், யாழ். சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை - 36 பேர், யாழ். சென் மேரிஸ் பாடசாலை - 40 பேர், கொட்டடி நமசிவாய வித்தியாலயம் - 53 பேர், நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா வித்தியாலயம் - 10 பேர். (எ-5)

### நாளை

சித்திரை 15
திங்கட்கிழமை
28.04.2003
திதி : துவாதசி
பிற்பகல் 12.51 வரை
நட்சத்திரம் :உத்தரட்டாதி
முழுவதும்
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 11.58 - 1.28
[illegible]
[illegible]

### உதயவாக்கு

நேர்மையாளன் நியாய மற்ற முறையில் வழங்கப் [illegible] புண் [illegible]படுகிறான்.

# யாழ்.பிரதேச செயலகத்தை புனரமைக்க ரூ.20லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைப் புனரமைப்புச் செய்வதற்கென ரூபா 20 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச செயலகத்திற்கென அண்மையில் பதினொரு லட்சம் ரூபா செலவில் சுண்டுக்குளியில் கொள்வனவு செய்யப்பட்ட கட்டடத்தை புனரமைப்புச் செய்வதற்கே யாழ்.அரச அதிபரால் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

மேற்படி நிதியினைப் பயன்படுத்தி கட்டடத்தைப் புனரமைக்கும் பணிகள் உடன் ஆரம்பிக்கப்படவுள்ளது என பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை மேற்படி பிரதேச செயலகம் கச்சேரி, நல்லூர் வீதியில் - செயலகத்துக்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றில் வசதியீனங்கள் மத்தியில் இயங்கி வருவது தெரிந்ததே.
(எ-180)

# புனர்வாழ்வுப் பணிகள் துரிதமாகும் வேளை கட்டுமான தொழிலாளர்களுக்கு குடாநாட்டில் பற்றாக்குறை

## விசேட பயிற்சி வழங்க ஏற்பாடு

வலி.தெற்கு,ஏப்.27

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கட்டுமான வேலைகளுக்கு வேண்டிய திறன் தொழிலாளர்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்துள்ள கட்டடங்கள்,வேலைத்தளங்கள் என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன.

சமகாலத்தில் அரசினாலும், அரச சார்பற்ற நிறுவனங்களாலும மற்றும் தனியார் நிறுவனங்களாலும் அதிக அளவில் கட்டுமான வேலைகள் இடம்பெற்று வருவதால் கட்டுமான திறன்கொண்ட தொழிலாளர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

கட்டுமானத் திறன்கொண்ட தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை காரணமாக அதில் தேர்ச்சியுற்ற பல தொழிலாளர்களை வெளியிடங்களில் இருந்து அழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் - கூறப்படுகிறது.

யாழ்குடாநாட்டில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு நடவடிக்கைகள் விரைவில் இடம்பெறவுள்ளதால், கட்டுமான திறன்கொண்ட தொழிலாளர்களை உருவாக்கவும் - அவர்களுக்கு பயிற்சியளிக்கவும் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் மனிதவள அபிவிருத்திப் பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வேலையற்றிருக்கும் இளைஞர்கள் மத்தியிலிருந்து இப்பணியில் ஈடுபட விரும்புவோரைத் தெரிவு செய்து ஆறுமாத பயிற்சிகளை வழங்க பிரதேச செயலகங்கள் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. (எ-152)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கி
## அறிவித்தல்

மக்கள் வங்கியில் வல்வெட்டித்துறைக் கிளையிலும், சங்கானைக் கிளையிலும் 31-12-1984 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையினில்

## பகிரங்க ஏல விற்பனை

செய்யப்படும்.

| கிளைகளின் விவரம் | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| வல்வெட்டித்துறை | 10-05-2003 இருந்து - → 12-05-2003 வரை | யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை |
| சங்கானை | 13-05-2003 இருந்து - → 17-05-2003 வரை | யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை |

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

யாழ். பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி.

(சி-27523)




இமாமி பவுடர்கள் நாள் முழுவதும் உங்களுக்குத் புத்துணர்ச்சியையூட்டி நறுமணத்துடன் திகழ வைக்கிறது.

அம்லா ஹெயர் ஒயிலில் அம்லாவும் விற்றமின் C யும் அடங்கியுள்ள தால் இது தலைமயிரை அடர்த்தியாக வளரச் செய்வதுடன் போஷாக்கும் அளிக்கிறது.




நவரத்ன ஒயில் நாள்முழுவதும் தலையைக் குளிர்மையாக வைத்திருக்க உதவுகிறது. இது தலைவலி, தலைப்பாரம், தூக்கமின்மை, அலுப்பு போன்றவற்றை நீக்க உதவுவதோடு தலை முடியையும் நன்கு வளரச் செய்கிறது.



இமாமி போரோபிளஸ் அன்ரிசெப்ரிக் கிறீம்
இது சருமத்தில் ஏற்படுகின்ற வெடிப்புக்கள், வரண்ட உலர்ந்த சருமம் கால் வெடிப்புக்கள் போன்றவற்றுக்கு உடனடி நிவாரணத்தைத் தருகிறது.
ஒரே நாளில் இரண்டு முறை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உபயோகிக்கவும். இது நறுமண மூட்டப்பட்ட கிறீம். ஆதலால் உடம்பின் எந்தப் பகுதிக்கும் ஏற்றது.




சந்தைப்படுத்துவோர்:
**HARCOURTS(PRIVATE)LTD.**
No:14, Station Road, Dehiwala.

யாழ்.முகவர்:
**JEGHAN PHARMACY**
ஜெகன் பார்மஸி
462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 2222294

---

## Cool Laminating

அழகிய பிள்ளையார், சிவன்அம்மன், முருகன் படங்களை குறைந்த விலையில் வாங்க, கூல் லெமினேற்றிங் செய்திட நாடுங்கள்.

பிள்ளையார் அச்சகம்,
676, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

விலை: 4.00 /=

---

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

## சித்தாரா பொன்னாங்காணி தைலம்

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ். மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பேசி. இல. -021-222-2567

(16206)

---

## மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்

We Serve

செல்வி
**தாமினி தவமோகன்**
மாணவி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

**இருதய சத்திர சிகிச்சை**
ரூபா 400,000/-

இதுவரை அன்பளிப்பு செய்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இன்னும் ரூபா 100,000/-தேவை. அன்பளிப்பு செய்ய விரும்புவோர் 31-05-2003இற்கு முன் அன்பளிப்பு செய்யவும். கல்விச்சமூகம் நினைத்தால் இது சிறிய விடயம். ஆசிரியர், பழைய மாணவர், பெற்றோர் தலா ரூபா 100/- உம், மாணவர்கள் தலா 100/- உம் அன்பளிப்பு செய்தால் இது சாத்தியமாகும். 31. 05. 2003இற்கு பின் அன்பளிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(1) கணக்கு இலக்கம் 17496
இலங்கை வங்கி, மானிப்பாய்

(2) கணக்கு இலக்கம் 8060004425
இலங்கை வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்.

அன்பளிப்புச் செய்தவர்கள் விவரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

லயன் மா.தியாகராஜா
தலைவர்
சட்டத்தரணி

லயன் செ.கேசவராஜன்
செயலாளர்
இளைப்பாறிய அதிபர்

(17168)

---

## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
### VADDUKODDAI

## மரவேலைப் பயிற்சிநெறி

மேற்படி பயிற்சிநெறி எமது நிறுவனத்தில் மீண்டும் இலவசமாக ஆரம்பமாகின்றன. ஆண்டு 9வரை படித்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

காலம்:- 6 மாதங்கள்
ஒழுங்கான பயிலுநருக்கு:
நாளாந்த ஊக்குவிப்பு படியாக ரூபா 30/- வழங்கப்படும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் நேரிலே வந்து யாழ்ப்பாணக் கல்லூரி தொழிநுட்ப நிறுவனம், வட்டுக்கோட்டைக் காரியாலயத்தில் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுதிகதி
**May 7th 2003.**


இயக்குநர்.

T.P: 070-213139 (C/27527)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்

பிறப்பு
25 - 08 - 1925



இறப்பு
31 - 03 - 2003

எங்கள் அன்புத் தெய்வமாய் விளங்கி 31. 03. 2003 அன்று இறையடி சேர்ந்த

**திருமதி பரமேஸ்வரி சீவரத்தினம்**

அவர்களின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்தியமும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 01.05.2003 வியாழக்கிழமை பகல் 11.00 மணியளவில் இல. 02, ரெலிகொம் வீதி, திருகோணமலையில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
திரு. சீ.சிவதரன்
இல.02, ரெலிகொம் வீதி,
திருகோணமலை.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C/27545)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பு, ஆச்சி ஆண்ட மண்ணில்....



மயிலிட்டித் துறையின் பழையதோற்றம்

ந.பரமேஸ்வரன்

4

நாங்கள் பஸ்ஸிலும், சைக்கிளிலும், கால்நடையாகவும் சினிமாவுக்குச செல்வதுண்டு. சில சமயங்களில் ஒரு சைக்கிளில் மூன்று பேர் செல்வோம். சைக்கிள்களில் பெரும்பாலும் கரியர் இருக்கமாட்டாது. ஒருவர் சைக்கிளின பின் அச்சில் கால்களை வைத்துக் கொண்டு மிதிப்பவரின் தோளகளைப் பிடித்தவாறு நிற்பார். இவ்வாறு என்னுடன் அடிக்கடி சினிமாவுக்கு வரும் நண்பன் கணேஷ் அண்மையில் இந்தியாவில் மண்டபம் அகதி முகாமில் காலமாகிவிட்டார்.

யாழ்தியேட்டர் கடற்கரையோரமாக அமைந்திருந்தது. 9.30இற்கு இரண்டாவது காட்சிக்கு அவ்வளவு சனக்கூட்டம இருக்கமாட்டாது. கதவுகள் திறந்தே விடப்பட்டிருக்கும் கடற்காற்று இதமாக வீசும். நாங்கள் கலரியில் சென்று ஆளுக்கு ஒரு வாங்கைத் தூக்கிப் போட்டுக்கொண்டு படுத்திருந்தவாறு படம் பார்த்ததுமுண்டு. இந்த இரு படமாளிகைகளிலும் ஆங்கிலத் திரைப் படங்கள் திரையிடப்படும்போது மட்டும காலை 10.30 மணிக் காட்சி காண்பிக்கப்படும்.

காலை 9.40 மணிக்கு முதலாவது பாடம் முடிந்தவுடன் தினவரவு பதியப்படும். வரவு பதியப்பட்டதும் கம்பி பிடுங்கப்பட்ட ஜன்னலால் மதிலில் ஏறி ஒழுங்கையில் குதித்து சினிமாவுக்குச் செல்வது வழக்கம். காலை 10.30 இற்கு திரைப்படம் ஆரம்பமாகி 12.30இற்கு முடிவடையும் நண்பகல் 12.40 முதல் 1.40 வரை மதியபோசன இடைவேளை. மதிய போசன இடைவேளை நேரத்தில் நாம பாடசாலைக்குள் நுழைந்துவிடுவோம். ஒருநாள் காலை இரண்டாவது பாடநேரம் அதிபர் பாடசாலையைச் சுற்றிக் கொண்டு வந்தார். எமது வகுப்பறையில் பெண்கள் மட்டுமே இருந்தனர். ஆண்களெவரையும் காணவில்லை. தினவரவு இடாப்பில் அனைவருக்கும் வரவு பதியப்பட்டிருந்தது. உடனே ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு நேரே தியேட்டருக்கு வந்துவிட்டார். வந்து தியேட்டருக்குள் இருந்தவர்களை ஒரு தடவை நோட்டம் விட்டு விட்டு வந்து விட்டார். மறுநாள் காலை பாடசாலை செல்லும்போதே கலக்கத்துடன்தான் அனைவரும் பாடசாலை சென்றோம். நாம் எதிர்பார்த்தபடியே கோயில் பூசை முடிந்து வகுப்பு ஆரம்பமாகியதும் அதிபரின் பியோன் வந்து 'இன்ன, இன்னாரை உடனடியாக அதிபர் வரட்டாம்' என்று பெயர்ப்பட்டியலுடன் வந்தார். அப்போது ஆங்கிலப் பாடம் நடந்து கொண்டிருந்தது. ஆங்கில அசிரியைக்கு விடயம் தெரியாது. அப்படி என்ன தப்புச் செய்தீகள். முழு வகுப்பும் சேர்ந்து என்ற தோறணையில் வினவினார். நாங்கள் போனபோது அங்கு ஏற்கனவே எம்முடன் சினிமாவுக்கு வந்திருந்த ஏனைய வகுப்புக்காகளும் நின்றனர். அன்று அதிபர் கனக சபாபதி அடித்த தழும்பு இன்றும் தொடையிலிருக்கிறது.

காங்கேசன் சிமெந்து ஆலை உலகிலேயே இரண்டாவது பெரிய சிமெந்து ஆலை எனக் கருதப்படுகிறது. சுமார் ஆயிரத்து ஐந்நூறு குடும்பங்களுக்கு வாழ்வளித்தது இந்த ஆலை. காங்கேசன் சிமெந்து ஆலையை காங்கேசன்துறையில் நிறுவியவர் அப்போது கைத்தொழில் அமைச்சராயிருந்த ஜி.ஜி.

சிமெந்துத் தொழிற்சாலைத் திறப்பு விழாவில் உரையாற்றிய ஜி.ஜி. இனி மேல் தெற்கில் சிங்களவன் வீடு கட்டுவதாயிருந்தாலும் வடக்கிலிருந்துதான் சிமெந்து போகவேண்டும். இந்தச் சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து போகிற சிமெந்தில்தான் இனிமேல் சிங்களவன் வீடு கட்டவேண்டும் என தனக்கே உரித்தான் பாணியில் சிம்மக்குரலில் கர்ஜித்தாராம். ஜி.ஜியின் வாரிசுகள் இன்றும் இதனை பெருமையுடன் கூறிவருகின்றனர். உண்மைதான் அந்தக் காலத்தில் காங்கேசன் சிமெந்து ஆலையில் உற்பத்தி செய்யப்பட்ட சிமெந்தே (காங்கேசன் சிமெநது) இலங்கை முழுவதும் எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த ஆலையிலுள்ள சிமெந்து அரைக்கும் இயந்திரம் இருபத்தி நான்கு மணிநேரமும் இயங்கி வந்தது. இந்த ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்காக ஊதப்படும் சங்கின் ஒலி நான்கு - ஐந்து மைல்களுக்கப்பாலும் கேட்கும். காலை 6.00-2.00, பின் 2.00 - 10.00, பின் 10.00-6.00 என மூன்று 'ஷிப்டு'களாக ஊழியர்கள் வேலை செய்தனர். இவர்களைவிட அலுவலக உத்தியோகத்தர்கள் காலை 8.00 முதல் மாலை 4.00 மணிவரை வேலை செய்தனர். இவர்கள் வேலை தொடங்குவதற்கு பதினைந்து நிமிடங்களுக்கு முன்னரும் வேலைதொடங்கும்போதும் அதேபோல் வேலை முடியும்போதும் சிமெந்துத் தொழிற்சாலைச் சங்கு ஊதப்படும். காலை 5.45 - 6.00, 7.45 - 8.00, மதியம் 1.45 - 2.00, மாலை 3.45 - 4.00, இரவு 9.45 - 10.00 என தினமும் சிமெந்துத் தொழிற்சாலைச் சங்கு ஊதப்படும்.

எமது பிரதேசத்தில் பெரும்பாலானோர் சிமெந்துத் தொழிற்சாலைச் சங்கொலியைக் கேட்டே தமது நாளாந்த அலுவல்களை மேற்கொள்வர். பலருடைய வீடுகளில் மணிக்கூடு இல்லாததும் இதற்கு ஒரு காரணம். எமது வீட்டிலும் மணிக்கூடு இருக்கவில்லை. நாமும் சிமெந்து ஆலைச் சங்கொலியைக் கேட்டே பாடசாலை செல்வது வழக்கம். "ஜி.ஜி. கூறியது போல் தென்னிலங்கையில் கட்டடம் கட்டுவதற்கும் காங்கேசன் சிமெந்தே பயன்படுத்தப்பட்டது. ஆனால், யாழ்ப்பாணத்து வளத்தைச் சுரண்டியே தென்னிலங்கையில் கட்டடங்கள் கட்டப்பட்டன. கிட்டத்தட்ட ஆறு சதுரமைல் நிலப்பரப்பை காங்கேசன் சிமெந்து ஆலை விழுங்கி ஏப்பமிட்டு விட்டது. கீரிமலைக்கும் காங்கேசன் துறைக்குமிடையில் போயிட்டி என்ற கிராமம் இருந்தது. இப்போது போயிட்டிக் கிராமம் இருந்த சுவடே தெரியாமல் அழிக்கப்பட்டுவிட்டது. இதேபோல் மாவை கலட்டி என்ற கிராமத்திலும் அரைவாசியை சிமெந்து ஆலை விழுங்கிவிட்டது. நல்லவேளையாக 1990ஆம் ஆண்டுடன் சிமெந்து ஆலை மூடப்பட்டுவிட்டது. இல்லாவிட்டால் கருகம்பனை, சீகாவலை, தையிட்டிப்புலம், விழிசிட்டி, பொற்கலந்தமலை, பன்னாலை போன்ற கிராமங்களையும் சிமெந்து ஆலை விழுங்கியிருக்கும். காரணம் லங்கா சிமெந்து லிமிட்டேட் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு சிமெந்து உற்பத்தி ஏற்கனவே இருந்ததைவிட இருமடங்காக அதிகரிக்கப்பட்டிருந்தது. அப்போது காங்கேசன்துறையைப் பிரதிநிதித்துவப் படுத்திய தந்தை செல்வா போன்றோரும் ஏனைய தமிழ் அரசியல்வாதிகளும் ஏன் இந்தப் பாரிய பிரச்சினையில் அக்கறை செலுத்தாதுவிட்டனர் என்று புரியவில்லை.



போயிட்டிக் கிராமம் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தால் சுவீகரிக்கப்பட்ட போது அங்கிருந்த வைரவர் கோயிலையும் சுவீகரிக்க சிமெந்துக் கூட்டுத்தாபனம் முயன்றது. இந்த வைரவர் கோயில் சோலை வைரவர் கோயில் என அழைக்கப்பட்டது. இந்தக் கோயில் பூசையை நாமே செய்துவந்தோம் சரவணமுத்து என்பவர் கோயில் நிர்வாகியாக இருந்தார். சிமெந்துக் கூட்டுத்தாபனம் கோயிலை சுவீகரிக்க முயன்றபோது சரவணமுத்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். எனது தந்தையும் சரவணமுத்துவும் சுந்தரலிங்கத்தை கோயில் சார்பில் ஆஜராகுமாறு கேட்டுக்கொண்டதையடுத்து சுந்தரலிங்கம் கோயில்காரர்கள் சார்பாக வாதாடினார். நீதிமன்றம் வழிபாட்டுத் தலங்களை சுவீகரிக்கமுடியாது என சிமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு உத்தரவிட்டது. 1984ஆம் ஆண்டுவரை கோயில் பூசைகள் இடம்பெற்று வந்தன. இப்போது கோயில் இருக்கிறதோ இல்லையோ தெரியாது.

சிமெந்து ஆலையை அண்டிய கிராமங்களான கிளானை, கொல்லங்கலட்டி, கருகம்பனை போன்ற பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் வெற்றிலைச் செய்கையையே மேற்கொண்டு வந்தனர். சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுத்தூசி இப்பகுதி வெற்றிலைகளின் மீது படியும். சிலவேளைகளில் வீதியால் போவோர் வருவோர் மீதும் தூசி படிவதுண்டு. இந்தத் தூசியின காரணமாகவே காங்கேசன்துறையில் இயங்கிவந்த அரசாங்க மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழைக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டது.

இலங்கையில் முதன் முதலாக அலுமினியத் தொழிற்சாலை, வாளித் தொழிற்சாலை என்பன வலி.வடக்கிலேயே ஆரம்பிக்கப்பட்டதுடன் தரத்திலும் சிறந்து விளங்கின. டொலர் அலுமினியம் தொழிற்சாலைதான் இலங்கையின் முதல் அலுமினியத் தொழிற்சாலை. இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டபோது சீனாவிலிருந்தே தொழில்நுட்பவியலாளர்கள் வரவழைக்கப்பட்டனர். இதேபோல் எல்பிகெம் வாளித் தொழிற்சாலைதான் இலங்கையின் முதலாவது வாளித் தொழிற்சாலை. இவையிரண்டும் மாவிட்டபுரத்தில் இருந்தன.

இலங்கையில் சர்வதேச விமான நிலையங்கள் இரண்டுதான் இருந்தன. ஒன்று கட்டுநாயக்கா விமானநிலையம் மற்றையது பலாலி விமானநிலையம். பலாலி விமானநிலையத்திலிருந்து திருச்சிக்கு விமானசேவை நடைபெற்றுவந்தது. பலாலி இராணுவ முகாம் விஸ்தரிக்கப்பட முன்னர் நான் மூன்று தடவைகள் பலாலி விமான நிலையத்திற்குச் சென்று வந்துள்ளேன். அப்போது விமானநிலையப் பிரதேசத்தில் இராணுவத்தினரைக் காணமுடியாது. பலாலி இராணுவ முகாம் விமான நிலையத்திலிருந்து சற்றுத் தள்ளி அமைந்திருந்தது. முதல் முறை நான் பலாலி விமான நிலையத்திற்குச் சென்றது 1969ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன். கதிர்காமம் செல்வதற்காக கொழும்பு செல்வதற்கு மூன்று புகையிரத ஆணைச் சீட்டுக்களைச் சமர்ப்பித்து விமானப்பயணச் சீட்டு பெற்று எயர் சிலோன் விமானத்தில் கொழும்புக்குப் புறப்பட்டோம். அடுத்தது எமது அத்தான் சிவம் வெளிநாடு சென்றபோது திருச்சிக்குச் சென்றே வெளிநாடு சென்றார். அவரை வழியனுப்பியபோது விமான நிலையத்தின் மேல் தட்டில் நின்று கையசைத்து வழியனுப்பினோம். மூன்றாவது முறை நான் பலாலி விமான நிலையத்திற்குச் சென்றது எனது தந்தை திருகோணமலைக்கு விமானத்தில் சென்றபோது அவரை வழியனுப்ப சென்றேன். அப்பாவை வழியப்பிவிட்டு பலாலிச் சந்திக்கு நடந்து சென்றேன். 763ஆம் இலக்க பருத்தித்துறை பஸ் வந்தால் அதிலும் கீரிமலைக்குச் செல்லலாம் என்பதால் நடந்துவரும்போது பலாலி இராணுவ முகாம் வாசலில் 'நீதி விரோதச் செயல்களைத் தடுக்கும் தலைமைச் செயலகம்' என பெரிதாக எழுதப்பட்டிருந்ததைப் பார்த்துவிட்டு நடைமுறையில் இங்கு எழுதப்பட்டுள்ளது எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கப்படுகிறது என எனக்குள் அப்போதே யோசித்தேன். காரணம் பண்டத்தரிப்புக்கு அருகிலுள்ள பிரான்பற்றுக் கிராமத்தவர்கள் கீரிமலைக்கு அந்தியேட்டிக்கிரியை செய்ய வந்தால் மாலையில்தான் திரும்புவது வழக்கம். அப்போது பலாலியிலிருந்து மாதகலுக்கு இராணுவத்தினர் தினமும் சென்று திரும்புவது வழக்கம் (கள்ளக்கடத்தலைத் தடுக்கும் நோக்குடன் மாதகலிலும் சிறிய இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது) சில சமயங்களில் கீரிமலைக்குவரும் பிரான்பற்று வாசிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கைகலப்பு ஏற்படுவதுண்டு. இவ்வாறு கைகலப்பு ஏற்பட்டால் ஜீப்பில் வரும் இராணுவத்தினர் அடியை வாங்கிக் கொண்டு சென்று விடுவர். பின்னர் ட்ரக்கில் பெருந்தொகையாக வந்து கீரிமலையில் நிற்கும் அனைவர் மீதும் தாக்குதல் நடத்துவர்.

நான் பலாலி இராணுவ முகாமைத் தாண்டி வந்துகொண்டிருந்தபோது ஆக மூன்றே மூன்று சிப்பாய்கள் மட்டுமே முகாம் வாசலில் காவல் கடமையிலீடுபட்டிருந்தனர். இவர்களில் இருவர் ஒரு பக்கமாகவும் மற்றவர் இவர்களுக்கு எதிர்த்திசையிலுமாக மாறி மாறி முகாம் வாசலிருந்து முகாம்வரை அணி நடையிலீடுபட்டிருந்தனர்.

பலாலியில் வீரசைவப் பரிகாரி ஒருவரும் வைத்தியத் தொழில் ஈடுபட்டு வந்தார். இவரது பெயர் பஞ்சாட்சரம் இவரை எல்லோரும் ஐயர் என்றே அழைப்பர். இவர் தற்போதுள்ள சுதேச மருத்துவர்களைப் போல் ஆங்கில மருந்துகளை வழங்குவதில்லை. முற்றுமுழுதாக நாட்டு மருந்துகளையே வழங்குவார். குடாநாட்டில் அந்தக் காலத்தில் இவரை அறியாதவர்கள் இருந்திருக்கமாட்டார்கள். நான் நினைக்கின்றேன் வார்ட் வசதியுடன் கூடிய ஒரேயொரு சுதேச தனியார் மருத்துவமனை ஐயருடையதாகத்தான் இருந்திருக்கும்.

ஐயருடைய வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்த சிகிச்சை பெறுபவர்களுக்கு பத்திய உணவே பரிமாறப்படும். ஐயரிடம் வைத்தியத்திற்குச் செல்லும் நோயாளிகளிடம் ஐயர் பணம் கேட்பதில்லை. மருந்து கொடுக்குமிடத்தில் உண்டியல் ஒன்று இருக்கும். நோயாளிகள் தாம் விரும்பிய தொகையை அந்த உண்டியலுக்குள் போட்டுவிட்டச் செல்லவேண்டியதுதான்.

வடக்குப் பகுதியில் அமைந்திருந்த ஒரேயொரு மூன்று நட்சத்திர விடுதி ஹாபர் வியூ ஹோட்டல். இது கீரிமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் அமைந்திருந்தது. வடக்கு - கிழக்கிலுள்ள விடுதிகளில் டிஸ்கோ நடனத்தை (Discotheque) நடத்திய ஒரேயொரு விடுதியும் இதுதாதன். தற்போது இநத ஹோட்டல் இராணுவ முகாமாக மாறி விட்டது.

காலித்துறைமுகத்திற்கு அடுத்தபடியாக இலங்கையின் இரண்டாவது பெரிய மீன்பிடித்துறைமுகமாக மயிலட்டித்துறைமுகமே விளங்கியது. எனினும், மீன் உற்பத்தியைப் பொறுத்த மட்டில் காலியைவிட மயிலிட்டியில் பெருமளவு மீன் உற்பத்தி செய்யப்படடது. மயிலிட்டியில் கே.கே.துரைச்சாமி என்று ஒருவர் இருந்தார். இவரிடம் K.V.T. என்ற பெயரில் பல லொறிகளிருந்தன. நான் நினைக்கிறேன் தினமும் ஆறு தொடக்கம் பத்து வரையான லொறிகளில் ஐஸ் மீன் இங்கிருந்து தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டது.

பலாலி, மயிலிட்டி, கொல்லங்கலட்டி, கருகம்பனை, பன்னாலை, விழிசட்டி, மயிலங்கூடல் போன்ற கிராமங்களில் வாழ்ந்தவர்களில் பெரும்பாலானோர் விவசாயிகள். வெற்றிலை, மிளகாய், வெண்காயம், தக்காளி, திராட்சை, உழுந்து, பயறு, குரக்கன் என்பன இப்பகுதி விவசாயிகளால் பயிரிடப்பட்டன. இப்பகுதியிலிருந்து கணிசமானளவு திராட்சைப்பழம் தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டது. இப்பகுதி வெற்றிலையும் பிரசித்தமானது.

விழிசிட்டி நெய் இந்தப் பகுதியில் பிரசித்தம். சித்திரமேழியிலும் பாற்பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. எனினும் சித்திரமேழி நெய்யை விட விழிசிட்டி நெய் கூடுதலான விலைக்கு 'விற்பனை செய்யப்பட்டது. விழிசிட்டிப் பகுதியில் புளியம்பழம், பலாப்பழம் என்பன நிறைந்திருந்தன. விழிசிட்டியில் பலாப்பழம் விற்பனை செய்வோர் பலாப்பழம் பழுத்துவிட்டதா இல்லையா என்பதை பழம் மரத்திலிருக்கும் போதே பார்த்துச் சொல்வர். சொன்னால் சொன்னதுதான். இது இரண்டு மூன்று நாள்கள் செல்லும். இது நாளைக்கு வெட்டலாம். இது ஒரு வாரமாகும் என்றென்றெல்லாம் சொல்லித்தருவார்கள். விழிசிட்டிக் கிராமத்தில் பல பண்டிதர்கள் வாழ்ந்து வந்தனர். யாழ்ப்பாணத்தில் தடுக்கி விழுந்தால் பண்டிதர்கள் மீதுதான் விழ வேண்டும் என்ற கூற்று விழிசிட்டிக் கிராமத்துக்குத்தான் பொருத்தம். இவர்களுள் பண்டிதர் கதிரிப்பிள்ளை குறிப்பிடத்தக்கவர் இவர். சிறந்த தமிழறிஞர் பண்டிதர் உமாமகேஸ்வரனின் தந்தை.



சிமெந்துத் தொழிற்சாலையின் ஆரம்ப காலத் தோற்றம்

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வெ. | சூ. ▲ புதன் | சனி ராகு | |
| சந். | இராசிச் சக்கரம் | | வியா. |
| செ. | | | |
| | கேது | | |

# இந்த வார இராசி பலன்

மகாதேவா ஜோதிடம்

## 27-04-2003 - 03-05-2003

### மாற்றம்

27.04-2003 இல் பூரட்டாதி கும்பம் இராசியில் சந்திரன் நிற்கும்.

அரசியலில் பேச்சுத் தொடரும். உலக நாடுகளின் அழுத்தங்கள் இரு பகுதியினரையும் திரும்பவும் ஒரு நிலைப்பாட்டிற்கு வரச் செய்யும். சமாதானப் பேச்சுத் தொடரும் - தெற்கில் எதிர்ப்புணர்வு தோன்றும். இந்தியா ஆலோசனை சொல்லும். அமெரிக்கா அழுத்தம் கொடுக்கும். ஈராக்கில் எதிர்ப்புகள் தீவிர வாதிகளால் ஏற்படும். சீனாவில் தொடர்ந்து காய்ச்சல் பரவும். இந்து சமுத்திர, பசுபிக் சமுத்திரப் பிராந்திய நாடுகளில் இயற்கையின் சீற்றம் அழிவுகளைக் கொடுக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

உதயத்தில் ஆதித்தன் உள்ளவர்கள் உள்ளத்தில் கள்ளமற்று எல்லோருக்கும் தாளம் போடும் அரசியல் தலைவர் போன்று செயற்படுவார்கள். பொருள்வரவு, மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். புகழ் வரும். நீதி விசாரணைகள் வரலாம். யாத்திரை, இடமாற்றங்கள் கொடுக்கும். உஷ்ண பீடையால் உடல் களைப்பு வரும். கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை, வீடுமனைச் சிறப்பு வரும. வியாபாரிகள், சட்டத்துறையினர்கள், தோட்டக்காரர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள். மாணவர்களுக்கு சித்திகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள் வெள்ளி.*

### இடபம்

ஒன்றுபட்டு தமிழ்மக்கள் உரிமையை எவ்வித பேதமுமற்று பெறுவது யார்? ஒவ்வொரு தமிழ்மக்களும் சிந்தித்து செயலாற்றுங்கள். நீங்களும் தொழில் பீடங்களில் ஒற்றுமையற்று தடுமாறுவீர்கள். பொருள் வரவு குறையும். மனக்கவலை ஒன்று வருத்தும். பிரயாணத்தடை வரும். எதிர்ப்பாலார் உதவுவார்கள். பொருள் இழப்பு வரும். ஏழரைச்சனியன் தாக்கத்தில் எல்லோருடமும் குறைகேட்க நேரிடலாம். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். உஷ்ண பீடைகளால் வருந்துவீர்கள். குருத்தொழில், உலோகத் தொழில், மருந்துத் தொழில் செய்பவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள் :-வெள்ளி*

### மிதுனம்

கள்ள வோட்டுப்போட்டு நாடாளுமன்றம் சீற்பிடித்துச் செல்வது ஜனநாயகமா? அன்று ஈராக்குள் சென்ற அமெரிக்கா பேசுவது ஜனநாயகமா? இப்படியாக ஜனநாயகம் பேசும் சிலர் உங்கள் தொழில் ஸ்தானத்திலிருந்து நியாயம் கதைத்து உங்களுடன் வாக்குவாதப்படுவர். பொருள் வரவு அதிகரிக்கும். எதிர்ப்பாலார்கள் உதவி செய்வார்கள். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். குடும்பத்தினர்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். இனஜன வருகையால் சிறப்பு ஏற்படும். விவசாயிகள், ஆசிரியர்கள், பங்கு வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி(மத்தியானம்)*

### கடகம்

தமிழர் உரிமையை உலக நாடுகள் நியாயப்படுத்த தவறுமா என்ற ஏக்கம் எல்லோருக்கும். கவலையை விடுங்கள் எனச் சொல்ல முடியாத நிலை. அது போன்று உங்கள் உரிமைக்காக மேலதிகாரிகளிடம் நியாயம் கேட்டு தொழில் ஸ்தானத்தில் நிற்பீர்கள். வீடுமனைச்சிறப்பு, தொழிலில் புதிய பொறுப்பு வரும். புதிய நண்பர்கள் உதவுதல், உறவினர்கள் வீண்பழிசுமத்துதல், வீட்டில் சுபகாரிய ஒழுங்குகள், மாணவர்களுக்கு நன்மைகள், தூரத்துச் செய்திகள் வரும். சந்தைத் தொழில், குருத்தொழில், அரசியல்வாதிகள் போன்றோருக்கு நன்மைகள் கிடைக்கும்

*அதிர்ஷ்ட நாள்:-சனி*

### சிங்கம்

பெரிய நிர்வாகங்களில் நடக்கும் சிறுமைத்தனங்களைத் பெரியவர்களும் சேர்ந்து செய்வதை தட்டிக்கேட்க முடியாமல் பல சிறியவர்கள் இருப்பது வேதனைக்குரியதாகும். இப்படியாக உங்கள் தொழில் ஸ்தானத்தில் நடக்கும் சிறுமைத்தனங்களைக் கண்டும் பேசாமல் இருப்பீர்கள். பணவரவு, சகோதரர்களுக்கு நன்மை, தூரத்துச் செய்திகள் கவலை தரும், புதிய பொறுப்பு வரும், உஷ்ணபீடைகள் வருத்தும், இனசனக் கொண்டாட்டம், மாண்வர்களுக்கும் வியாபாரிகளுக்கும் சந்தை வியாபாரம் செய்பவர்களுக்கும் நன்மைகள் அதிகரிக்கும். பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்: சனி*

### கன்னி

சண்டை இப்பொழுது வராது. சனீஸ்வரன் மாற்றம் நடக்கும் பொழுது மனமாற்றங்கள் ஏற்படலாம். பழையபடி சமாதானப் பேச்சு தொடர உலக நாடுகள் உதவி செய்யும். எனவே, மனக்கவலையை விடுங்கள். தொழில் ஸ்தானத்தில் பதட்ட நிலை உருவாகலாம். தூரத்துச் செய்திகள் யோசனைகளை அதிகரிக்கும். இனசனங்கள் உதவி தருவர். ஒருவருக்கு உடல்நிலை பாதிப்பு வரும். மாணவர்கள் சிறப்பு அடைவார்கள். பொருள் தவறலாம். குருத்தொழில், செய்தி தொடர்பானவர்கள், வியாபாரிகள் அதிக நன்மைகள் அடைவார்கள.

*அதிர்ஷ்நாள்கள்: சனி, வெள்ளி*

### துலாம்

கலகம் பிறந்துதான் நியாயம் பிறக்கும் என்பார்கள் உண்மைதான். பேசாமல் இருந்து நாம் எத்தனை இழப்புக்களைச் சந்தித்துள்ளோம் என யோசிக்கிறீர்கள். பொறுமையாக இருந்து வந்ததனாலேயே உங்களுக்கு பலரும் உதவிகள் செய்கின்றார்கள். வீடு மனைச் சிறப்பு, சிலவேளை தீடீர் பிரயாணம் கொடுக்கும். பணச்செலவுகள் அதிகரிக்கும். புதிய தொழில் முயற்சிகள் வர இடமுண்டு. மாணவர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். விசாரணைகள் வருத்தலாம். சட்டவாதிகள், குருத்தொழில், விவசாயிகளுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: சனி, வெள்ளி*

### விருச்சிகம்

பிடிபட்ட பின்பு என்னதான் சாக்குப் போக்கு சொன்னாலும் மக்களிடம் இலேசில் எடுபடாது. உங்கள் தொழில் ஸ்தானத்திலும் சிலபிடிபாடுகள் ஏற்பட்டு மேலதிகாரிகளுடன் பிரச்சினைப்பட இடமுண்டு. தந்தை வழியினருடன் நல்லதல்ல. மருந்துக்குப் பொருள் போகும். குடும்பத்தில் அபிப்பிராய பேதம, அயலவர்கள் குறைசொல்லுதல். உஷ்ண பீடைகள், தொண்டை நோ, நாரிநோ வரும். இடமாற்றங்கள் நன்மை தராது. மாணவர்கள் நன்மை அடைவர். வியாபாரிகள், இரும்பு, மருந்து தொடர்பான தொழில் செய்பவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: சனி, வெள்ளி*

### தனுசு

சமாதானம் நாட்டில் மலர்ந்தால் நிவாரணங்கள் தானாக மலராதா? தொழில் ஸ்தானத்தில் சமாதானமாக இருந்து செயற்பட்டு நன்மைகள் பெறுவீர்கள். புதிய பொறுப்புக்கள் வரும். தூரத்துச் செய்திகள் கவலை தரும். அடிக்கடி தடுமாற்றம், தகப்பன் வழியினருக்கு நல்லதல்ல. குடும்பத்தில் சுபகாரியங்கள் சாதகமாகும். தொழில் ஸ்தானத்தில் புகழ் பரவும். புதிய பொருள் வாங்குதல், உஷ்ண பீடைகள், வயிற்றுநோ, கால்வருத்தம் என்பன கொடுக்கும். குருத்தொழில், வியாபாரம், மருந்துத் தொழில் செய்பவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, சனி, வெள்ளி.*

### மகரம்

போர் வேண்டாம் சமாதானம் தான் வேண்டும் என தமிழ் மக்கள் மட்டும் சொல்லவில்லை. புலிகளுடன் பேசுங்கள் என்று சிங்கள மக்கள், அவர்களின் தலைவர்கள் என எல்லோரும் சொல்கிறார்கள் இன்று நேற்றல்ல, நாற்பது வருடங்களுக்கு மேலாக. ஆனால் காலம் பேச்சிலே போகின்றது. காரியனுகூலங்கள் கேள்விக்குறிதான். அடிமனதில் நன்மை செய்யவேண்டும் என இருந்தால் அதிக காலம செல்லாது. உங்கள் தொழில் ஸ்தானத்திலும் ஏமாற்றங்கள் மிஞ்சும். பொருள்வரவு இருக்கும். அவமானங்கள் எதிர்ப்பாலாரால் வரலாம். கால்பிடிப்பு, உஷ்ணபீடைகள் கொடுக்கும். விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் நன்மை அடைவார்கள். மாணவர்களுக்கு மாற்றங்களால் நன்மைகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வெள்ளி, சனி.*

### கும்பம்

போராட்டம் தொடர்கின்றது. வெங்காயம், மீன்சந்தைப்படுத்தப் போராட்டமா? மக்கள் சொந்த இடங்களுக்குப் போகப் போராடடமா? அல்லது உயர் பாதுகாப்பு வலயப் போராட்டமா? தமிழ் மக்களின் சுயநிர்னய சுயாட்சிப் போராட்டம்தான் வெற்றிபெறவேண்டும். எமது இடத்தில் எமது ஆட்சி. எமது பிள்ளைகளுக்கு அளுமை கிடைக்க வேண்டும். எனவே தொழில் ஸ்தானத்திலும் உங்கள் இலக்கு வெற்றியடையப் போராடுவீர்கள். எதிர்ப்பாலாருடன் நிதானம். பொருள்பிரச்சினை, புதிய இடமாற்றம், பிரயாணத்தால் கஷ்டங்கள், மாணவர்களுக்கு நன்மை. வியாபாரிகள், குருத்துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, சனி*

### மீனம்

முயற்சி திருவினையாக்கும். இடமாற்றம் தொழில்முயற்சி புதிய ரூபத்தில் நன்மைகள் கொடுக்கும். புதிய பொறுப்புவரும். தூரத்துச் செய்திவரும். புதிய வீடுமனை, வாகனசுகம் கொடுக்கும். நண்பர்கள் உதவி செய்வார்கள். சளி, கிருமித் தாக்கம் கொடுக்கும். வியாபாரிகள், விவசாயிகள் நன்மை அடைவர். மாணவர்களுக்கு நன்மைகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- சனி, ஞாயிறு*

---

# போலி டாக்டர்கள் குறித்து பொதுமக்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.27

கிளிநொச்சிப் பகுதியில் பழைய மருந்துகள்,தொற்று நீக்கப்படாத உபகரணங்கள், தகுதி இல்லாத வைத்தியர் ஆகிய நிலைமைகளுடன் இயங்கி வந்த பல் சிகிச்சை நிலையம் ஒன்று தமிழீழ சுகாதார சேவையினரால் சீல் வைத்து மூடப்பட்டிருக்கிறது.

பல இடங்களில் இயங்கி வரும் இந்த பற்சிகிச்சை நிலையத்தின் கிளிநொச்சி கிளையே தற்காலிகமாக மூடப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பிரஸ்தாப பற்சிகிச்சை நிலையம் அண்மைக்காலங்களாக கிளிநொச்சியிலும் இயங்கி வந்தது. அங்கிருந்த டாக்டர் தமிழீழ சுகாதார சேவையினருக்கு பல்கட்டுபவராக உரிமத்திற்கு விண்ணப்பித்து பற் சிகிச்சை நடத்தி வந்தார். பற் சிகிச்சை பெற்ற பலர் இவரின் சிகிச்சையால் பாதிக்கப்பட்டு முறைப்பாடு செய்திருந்தனர். அதன் காரணமாக நிலையம் தமிழீழ சுகாதார சேவைகளால் ஆய்வு செய்யப்பட்டபோது 3 வருடங்களுக்கு முன் காலாவதியான விறைப்பூசி மருந்துகள் காணப்பட்டது, அத்துடன், உபகரணங்கள் தொற்று நீக்கப்படாமல் நிலையமும் தூய்மையற்றுக் காணப்பட்டது. இதன் காரணமாக பொறுப்பாக இருந்தவரை விசாரித்தபோது அவர் போலியான வைத்தியர் என சந்தேகிக்கப்பட்டு இச்சிகிச்சை செய்ய தகுதியான ஆவணங்களை கொண்டு வருமாறு தமிழீழ சுகாதார சேவையினரால் பணிக்கப்பட்டு நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது. இவர் யாழ். நகரிலும் பல இடங்களில் நிலையங்கள் அமைத்து செயற்படுவதாக அறியப்படுகிறது. எனவே, மக்கள் போலி வைத்தியர்களிடம் சிகிச்சை பெறுவதில கூடிய கவனம் செலுத்துமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செயற்றிறனற்ற அதிகாரிகள் குடாநாட்டுக்குத் தேவையில்லை

## ஆளுநரின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.27

செயற்றிறனற்ற அதிகாரிகள் எமக்குத் தேவையில்லை என்றார் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் செ.அமிர்தலிங்கம்.

நேற்றுமுன்தினம் உள்ளூராட்சித் திணைக்கள காரியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின் செய்தியாளர்களிடம் பேசிய போதே ஆளுநரின் செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இப்பொழுது குடாநாடு முன்னரைப் போன்று இல்லை என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். முன்னர் அபிவிருத்திப் பணிகள் எதுவும் இங்கு குறிப்பிடத்தக்க வகையில் இடம்பெறவில்லை. ஆனால், இப்போது யாழ்ப்பாணம் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பல அபிவிருத்திப் பணிகள் இங்கு துரித கதியில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலைமையில் செயற்றிறமையற்ற அதிகாரிகளை வைத்துக் கொண்டு நாம் எதுவும் செய்யமுடியாது. சிறந்த செயற்றிறனும் அனுபவமும் ஒன்றாக அமையப்பெற்றவர்களே இப்போது இங்கு பொருத்தமானவர்கள் - என்றார் அவர்.

(ஏ-8)

# வளர்ப்பு நாய்களுக்கு உரும்பிராயில் தடுப்பூசி

உரும்பிராய் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு நாளையும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

தடுப்பூசி ஏற்றப்படும் இடம், நேரம், பற்றிய விவரங்கள் வருமாறு:-

நாளை திங்கட்கிழமை காலை 9மணிமுதல் 10.30 மணிவரை உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்திலும், காலை 10.30மணி முதல் 12மணிவரை உரும்பிராய் வடக்கு [illegible] சனசமூக நிலையத்திலும், நண்பகல் 12மணிமுதல் 1.30 மணிவரை உரும்பிராய் மேற்கு வைத்தீஸ்வரா சனசமூக நிலையத்திலும -

நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9மணிமுதல் 10.30 மணிவரை உரும்பிராய் மேற்கு திருக்குமரன் சனசமூக நிலையத்திலும், 10.30மணிமுதல் 12மணிவரை உரும்பிராய் இளைஞர் சனசமூக நிலையத்திலும் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என வலி. கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (ஏ-ரி)

# வரணி கறுக்காய் பகுதியில் மீண்டும் கருப்பட்டி உற்பத்தி

வரணி வடக்கு கறுக்காயில் முன்னர் இயங்கி வந்த கருப்பட்டித் தொழிற சாலை இந்த மாதம் முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த கால யுத்த நடவடிக்கைகள் காரணமாக பலவருடங்களாக மேற்படி தொழிற்சாலை இயங்கவில்லை.

தற்போது தொழிற்சாலைக் கட்டடம் புனரமைக்கப்பட்டு கருப்பட்டி உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொழிற்சாலை மீள இயங்க ஆரம்பித்ததை அடுத்து கருப்பநீர் உற்பத்தியில் பலர் ஈடுபடுவதையும் அவதானிக்க முடிகின்றது.

(ஏ-170)

# மணிவிழாவும் பாராட்டும்

சண்டிலிப்பாய்,ஏப்.27

அமெரிக்க நாட்டுத் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத் தலைவரும் பிரபல இருதயநோய் வைத்திய நிபுணருமான க.சண்முகசுந்தரத்தின் மணிவிழாவும் பாராட்டுவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலய திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலய சமூகமும் மாதகல் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கங்களும் இணைந்து இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ளன.

சென்.ஜோசப் வித்தியாலய அதிபர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு. பி.அன்ரனிப்பிள்ளை அடிகளார், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

யாழ்.மாவட்ட எம்.பி. மாவை சேனாதிராசா, யாழ். பல்கலைக்கழக மெய்யியல்துறை பேராசிரியர் ந.ஞானகுமாரன், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் முன்னாள் பணிப்பாளர் என்.நச்சினார்க்கினியன் உட்பட மற்றும் பலர் சிறப்புரை நிகழ்த்துவர்.

(ஏ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வரிசை



நூல்:- **'பொதுச் சாதாரணப் பரீட்சை'**
ஆசிரியர்:- பீ.உமாசங்கர், பீ.கமல்தாசன்
வெளியீடு:- உமா பப்ளிக்கேசன்

**பொது**ச் சாதாரண பரீட்சைக்கு ஆங்கிலத்தில் பல நூல்கள் இருந்த போதும் தமிழில் போதுமான நூல்கள் இல்லை. இக் குறைபாட்டினைப் போக்கும் வகையில் இரட்டையர்கள் ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சி தரும் செயலாகும். பீ.உமாசங்கர், பீ.கமலதாசன் ஆகிய இருவரும் பொதுச் சாதாரண பரீட்சையை மையமாகக் கொண்டு காலத்துக்குக் காலம் பல நூல்களை வெளியிட்டுள்ளனர். இரண்டாயிரம் ஆண்டிலிருந்து எழுதப்புறப்பட்டவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் ஏழு பதிப்புக்களை வெளியிட்டுள்ளனர். 7 ஆவது பதிப்பு ஜனவரி 2003 இல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய மின்னல் வேகத்தில் இடம்பெற்றுவரும் நூல் வெளியீட்டால் மாணவர்கள் பல புதுப்புது விடயங்களை உடனுக்குடன் தெரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**திரு.க.தேவராஜா,**
தலைவர்,வணிகத்துறை



நூல்:- **வளர்பிறை**
(உளவளத்துறை, உளவியற் காலாண்டு சஞ்சிகை)
வெளியீடு:- அன்னை இல்லம்

**கணத்துக்குக்கணம்** எம்மில் ஏற்படும் உணர்வுகளை எவ்வளவு விவேகமாக நாம் கையாளுகின்றோம் என்பதிலேதான் எமது உளநலம் பெருமளவு தங்கியிருக்கின்றது. அவ்வப்போது தோன்றி மறையும் உணர்வுகளை நாம் தெளிவாக இனங்கண்டு ஆரோக்கியமான விதத்திலே இவ்வுணர்வுகளுக்கு வடிகால் அமைப்பது எமது ஆளுமையின் மலர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் இன்றியமையாததாகும். அந்த வகையில் தற்போது வெளிவருகின்ற அன்னை இல்லத்தின் இரண்டாவது வளர்பிறை இதழ், உணர்வுகள் பற்றிய பல்வேறு ஆக்கங்களுடன் மலர்கின்றது. அத்துடன் நாம் ஏற்கனவே அறிவித்திருந்தது போல 'உளவியலாளர்கள் பரிசை' என்னும் பகுதியையும் இவ்விதழில் நாம் ஆரம்பிக்கின்றோம்.

உளவளத்துணை மற்றும் உளவியல் போன்ற துறைகளில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில சஞ்சிகைகளே ஈழத்தில் வெளிவருவதால் வளர்பிறைக்கு வாசர்களின் பலமான ஆதரவு கிட்டும் என நம்புகின்றோம்.

உளவளத்துணை, உளவியல் போன்ற துறைகளைக் கற்றுத் தேர்ந்தோர் எங்கிருந்தாலும் வளர்பிறை முழுநிலாவாக மலர தங்களது ஆக்கங்களையும் பங்களிப்புக்களையும் செலுத்த முன்வரவேண்டும் என்ற அழைப்பையும் விடுக்கின்றோம்.

**ச.எ.றெஜினோல்ட் அ.ம.தி.**
(இணைப்பாளர்)



நூல்:- **'வடபுலத்துபொதுவுடமைஇயக்கமும் தோழர் கார்த்திகேயனும்'**
ஆசிரியர்:- சி.கா.செந்திவேல்
வெளியீடு:- புதிய பூமி

.... இந்நூல் இன்றைய வடபுலத்துச் சூழலில் கடந்த காலத்தையும் சமகாலத்தையும் தீவிரமான தேடல் பார்வையின் ஊடே நாடி நிற்கும் இளைய தலைமுறையினருக்கு உதவும் என நம்ப முடியும். மாக்சிசத்தின் வாயிலாக சமூக விடுதலை, சமூக மாற்றம் நோக்கி சிந்திக்கவும் செயறபடவும் முன் வருகின்ற ஒவ்வொருவருக்கும் இந்நூல் ஒரு பயன் உள்ளதாக அமையமுடியுமாயின் அதுவே திருப்தி தருவதாகும். அத்துடன் சகல வடபுலத்து பொதுவுடமை இயக்கப் போக்கில் பங்கேற்று வழிநடந்து பயணித்து வரும் புதிய தலைமுறையினருக்கு தமது முன்னோடிகளான தோழர்கள் எவ்வாறு செயற்பட்டுச் சென்றார்கள் என்பதை எடுத்துக் கூறுவதாகவும் இந்நூல் அமைகின்றது.



'ஆண்டி கேணி ஐயனாரின் அற்புத வரலாறும் ஆண்டி முனிவர் புராணமும்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் காரைநகர் ஈழத்து சிதம்பர ஆலயத்தில் இடம்பெற்றது.

நூலின் முதற்பிரதியை மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஞானசம்பந்தக் குருக்களிடமிருந்து யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.



ஆசிரியர் தில்லையம்பலம் மதிவதனன் எழுதிய 'ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு' நூல் வெளியீட்டு விழா அண்மையில் விக்ரோறியாக் கல்லூரி றிஜ்வே மண்டபத்தில் நடைபெற்றது. நூலின் முதற்பிரதியை நூலாசிரியரிடமிருந்து எஸ்.சிவராசா பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

# தமிழ்: தமிழகத்தில் 'மிக்ஷர்' ஈழத்தில் தேன்குழல்

## முனைவர் அறவாணன் தெரிவிப்பு



இக்காலத்துத் தமிழ்நாட்டில் பேசப்படும் தமிழ் 'மிக்ஷர்'. ஈழத்தில் பேசப்படும் தமிழ் 'தேன்குழல்' - இவ்வாறு கூறினார் பேராசிரியர் முனைவர் கா.பா. அறவாணன்.

இந்தியாவின் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரான பேராசிரியர் கா.பா.அறவாணன், தந்தை செல்வநாயகத்தின் 26 ஆவது நினைவுநாள் நிகழவில் நினைவுப் பேருரையாற்றுவதற்காக யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள இவர், நேற்றுமுன்தினம் மாலை 'உதயன்' அலுவலகச் செய்தியாளருக்கு விசேட செவ்வி ஒன்றை வழங்கினார். இந்தச் செவ்வியிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்தமிழர்கள் தொடர்பில் தமிழ் நாட்டின் நிலைப்பாடு (Permanent Policy) என்பது கிடையாது. அரசியல்பாடு மட்டுந்தான் உள்ளது. அது எப்போதும் ஒரு நிறம் கொண்டிருக்காது. தந்தை செல்வா மிகப் பெரியவர். அவர் தொண்டாற்றிய இடம் மிகச் சிறியது. சின்னவர்களைப் பெரும்பான்மையாக உடையது. இலங்கையில் இருந்துகொண்டே லண்டன் பல்கலைக்கழகப்பட்டத் தேர்வு எழுதிச் சித்திபெற்றதும், பணியாற்றிக் கொண்டே சட்டக் கல்வியில் வெற்றி பெற்றதும், வருவாய் மிகுதி தரும் வழக்குரை தொழிலைவிட்த் தமிழ்ச் சமுதாய நலனே பெரிதெனத் தன் நலனைத் தியாகம் செய்ததும் இன்றைய இளைஞர்களின் இதயத்தில் பதிய வேண்டியவை ஆகும்.

-.இப்படி பேராசிரியர் மேலும் கூறினார். (எ-9)

# போர் பாதித்த மாணவர் மனங்களில் உள உய்வினை கலைகள் ஏற்படுத்தும்

**யா**ழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றத்தினரால் கடந்த 19, 20 ஆகிய தினங்களில் நுண்கலைத் துறைசார் போட்டிகள் நடத்தப்பட்டன. சித்திரக்கலை, இசைக கலை, நடனக்கலை, நாடகக்கலை என நான்கு துறைகளிலும் நடத்தப்பட்ட இப்போட்டியானது 'அழகெழல்' என்ற பெயரால் மகுடம் சூடப்பட்டிருந்தது. அழகு+எழல் = அழகெழல் என்பது அழகியல் எழுச்சியை, உயர்ச்சியை,



சித்திரப் போட்டியில் ஆர்வத்துடன் ஈடுபடும் மாணவர்கள்

மேன்மையை குறிப்பதாகும்.

அழகியல் கல்வியை பாடசாலை மாணவரிடையே மேம்படுத்தும் நோக்கோடு இப்போட்டிகள் பரந்தளவிலேயே நடத்தப்பட்டன. யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து கல்வி வலயங்களிலுமிருந்து 150 பாடசாலைகள் விண்ணப்பித்த இப்போட்டியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் கலைத்துவம் வெளிப்படுத்தப்பட்டது. போட்டித் தொடரில் பரிசளிப்பு விழாவும் கால தாமதமின்றி கடந்த 29 ஆம் திகதி நிறைவாக நடத்தப்பட்டது.

பல்வேறு வடுக்கள் பதிந்து போயுள்ள மாணவர் மனங்களில் உயர்ந்த உள உய்வினை கலைகளால் ஏற்படுத்த முடியும். வேண்டாதவற்றை மனதிலிருந்து களைந்து வேண்டிய மகிழ்ச்சியையும் ரசஞான உணர்ச்சியையும் தரவல்ல தகுதி கலைகளுக்குண்டு.

"கலையானது தன்னலங்களும் பழிபாவங்களும் நிறைந்த உலகை விட்டு நம்மை அப்பால் அழைத்துச் செல்ல வல்லது" என்கிறார் கலைஞானி ரவீந்திர நாத்தாகூர் தான் பெறுகின்ற அனுபவத்தினை பிறரும் அனுபவிக்கத் தூண்டும் இக்கலையால் மனித மேம்பாட்டிற்கு வேண்டிய பண்புகளான பொறுமை, சகிப்புத் தன்மை, சமநிலை, ஆளுமை, காருண்யம், மகிழ்ச்சி, தன்னடக்கம், நட்பு, மனத்திருப்தி போன்ற பலவற்றை வளர்த்துக்கொள்ள முடிகின்றது.

நாகரிகம், பண்பாடு, கலாசாரம் என்பவற்றுக்கெல்லாம் கலைகளே அத்திபாரமாக அமைந்திருக்கின்றன. எகிப்து, கிரேக்கம், றோம், பபிலோனியா, சுமேரியா, இந்தியா போன்ற நாடுகள் எல்லாம் நாகரிகத்தில் மேம்பட்டவை எனச் சொல்வதற்கு கலைகளே ஆதாரமாக இருந்துள்ளன. மொழிகளாலும் சமயங்களாலும், நாடுகளாலும் பிரிந்து வாழும் மக்களின் கருத்துக்களை ஒருவருக்கொருவர் புரிந்துகொள்வதற்கும் வெளிப்படுத்துவதற்கும் கலை ஓர் எல்லை கடந்த மொழியாகும்.

கலையோடு இணையாத வாழ்வு பூரணமற்றது "நீ இரண்டு அப்பத்துண்டுகள் வைத்திருந்தால் ஒன்றினை விற்று ஒரு லில்லிப்பூ வாங்கு" என்பது சீனப்பழமொழி. ஆத்மீக வளர்ச்சிக்கு பெரிதும் உதவும் கலையானது பல விதமான உடல், உள நோய்களுக்கு ஒளடதமாகவும் விளங்குகின்றது. மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரை மனித மேம்பாட்டிற்கு உயிர்ப்பைத் தந்து கொண்டிருப்பது கலைகளே!

கல்வியின் பரந்த நோக்கம் தனித்துவ ஆற்றல்களை சமமாக விருத்தியடையச் செய்வதாகும். கற்றல் சமமாக அபிவிருத்தியடைவதற்கு தனி மனித அறிவு, மனஎழுச்சி, உள இயக் [illegible] கட்டாயமாக ஏற்பட வேண்டும். அழகியல் மூலமாக மனித ஆளுமை விருத்திக்குத் தேவையான நோக்குகள் நிறைவேற்றப்படுமென்பது தெளிவு அழகியல் கல்விமூலம் இரசித்தல், மனப்பாங்குவிருத்தி, ஆக்கபூர்வமான சிந்தனை வளர்ச்சி என்ற முக்கிய நோக்கங்கள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலைத் துறையினர் பாடசாலை மாணவர்களுக்கிடையே




நடனப் போட்டியில் முதலிடம்பெற்ற செல்வி பா.கீர்த்தனா


இவ்வாறான போட்டி ஒன்றை நடத்த முற்பட்டனர். இவ்வருட அழகெழல் போட்டிகள் தரம் 4,5 வகுப்புகளுக்கே நடத்தப்பட்டது. (சித்திரக்கலை தவிர) இப்படிப்பட்ட போட்டிகள் வருடாந்தம் நடத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. போட்டிகளில் பங்குகொண்ட மாணவர்கள் நேரடியாக தங்கள் உளார்ந்த திறன்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுடன் ஒவ்வொரு பிரிவிலும் தோற்றிய




போட்டிக்காக வடிவமைக்கப்பட்ட சிறப்புச் சின்னம்

மாணவர்களின் தரமான வெளிப்பாடுகளுக்கு ஊக்குவிப்புப் பரிசும் சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதன் மூலம் அத்துறை சார்ந்த உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் பாடசாலைகளுக்கும் சிறந்த ஓர் இடைவினையை ஏற்படுத்துவதும் இப்போட்டியின் .பிரதான நோக்கமாக இருந்தது. பல்வேறுபட்ட போட்டிகளையும் விழாக்களையும் சரியான-முறையில் ஒழுங்கு செய்வது தொடர்பான அனுபவக் கற்கையை ஆசிரிய மாணவர்களுக்கு இதனூடாக அளிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம் யுத்த களத்தில் மட்டுமல்ல பேச்சு மேசையிலும்தான்

## மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவிப்பு



அராலி,ஏப்.27

போராட்டம் என்பது யுத்தகளத்தில்தான் நடக்கவேண்டும் என்பதல்ல; அது பேச்சுமேசையிலும் நடைபெறலாம். இன்று அது நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வர்த்தகர்களுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு பேசும்போது தெரிவித்ததாவது:-

ஆயுதப் போராட்டமாக பரிணமித்த எமது போராட்டம், ஓர் அடிப்படைப் பிரச்சினைக்காக ஆரம்பிக்கப்பட்டதாகும்.

எனவே, இந்தப் போராட்டத்தில் அன்றாடப் பிரச்சினைகள் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்தவை. பொருளாதாரத்தடை, போக்குவரத்துத் தடை, கடல்வலயச் சட்டம் என்பவை ஸ்ரீலங்கா அரசின் திட்டமிடப்பட்ட சதிகளாகும். நாம் தற்போது சமாதானப் பேச்சுக்களுக்கு வந்தபோதிலும், எமது பிரச்சினைகளை இருவகையாகப் பார்த்தோம். ஒன்று அன்றாடப் பிரச்சினை, மற்றையது அரசியல் பிரச்சினை.

அன்றாடப் பிரச்சினை என்பது மீள்குடியமர்வு, போரால் ஏற்பட்ட வறுமையைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல், பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புதல் என்பவையாகும். இவை பற்றியே இன்று பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அரசியல் பிரச்சினை என்னும்போது உதாரணமாக இன்று யுத்தத்தினால் வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் சிதைந்துபோயுள்ளமையைக் குறிப்பிடலாம்.

ஒஸ்லோ மாநாட்டின் தீர்மானப்படி, விடுதலைப் புலிகளும் - அரசும் இணைந்தே உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து நிதித்தேவையைப் பெறுவது முடிவுசெய்யப்பட்டது. ஆனால், வாஷிங்ரனில் நடைபெற்ற மாநாட்டில் நாம் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றோம். இதனால்தான் நாம் டோக்கியோ மாநாட்டிலும் பங்கேற்பதில்லை என்ற முடிவை எடுத்திருக்கின்றோம்.

நாமும் பலபேருடன் ஆராய்ந்து, பலபேரைத் திரட்டி, வடக்கு - கிழக்கு அபிவிருத்தி சம்பந்தமாக எவ்வளவு நிதி தேவை என்பதை மதிப்பீடு செய்து, ஓர் அறிக்கை தயாரித்து சமர்ப்பித்திருக்கின்றோம். அது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மக்கள் வறுமைக்குள்ளாக்கப்பட்டது திட்டமிட்ட போராலேயேயாகும். தென்பகுதி மக்கள் வறுமைக்குள்ளானமை திட்டமிடல் இல்லாத சோம்பேறி அரசாங்கத்தினால் ஆகும். இவற்றை நீங்கள் நன்கு உணர வேண்டும். இன்று அரசு இலங்கை முழுவதும் வறுமை என்று பிரகடனம் செய்து உதவி வழங்கும் நாடுகளுக்கு முன்மொழிவுகளை வழங்குகின்றது. உண்மையில் பாதிக்கப்பட்டது வடக்கு - கிழக்கு பிரதேசங்களே.

சமாதானப் பேச்சுக்களில் பங்கு கொள்வதை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம் என்ற எமது அறிவிப்பால் தென்பகுதியில் அதிர்வலைகள் ஏற்பட்டிருக்கின்றன. நாம் சமாதானப் பாதையில் சென்று பேசுவதற்கும் அல்லது வழக்கமான பாதையில் போய் எமது உரிமையைப் பெறுவது என்பதற்கும் முடிவு அவர்கள் (அரசு) கையிலேயே உள்ளது - என்றார். (எ-14)

---

## உலகை...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்து இருப்பதாக ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கிறது. அவர்களின் வருகை குறைவால் அன்னிய செலாவணி கிடைப்பதும் மிகவும் குறைந்து இருக்கிறது.

இந்தியாவில் பல உற்பத்தி நிறுவனங்கள் அண்டை நாடான, சீனா, ஹொங்கொங், ஆகிய நாடுகளுடன் வர்த்தக தொடர்பு வைத்திருந்தன. சீனாவில் இருந்து உதிரிப்பாகங்கள் அதிக அளவில் இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. இப்போது அதுவும் நின்று போயிருக்கிறது. இதனால், வீட்டு உபயோகப் பொருள், மோட்டார் பொருள் உற்பத்தி நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கோடை காலங்களில் சீனா மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு பருத்தி ஆடைகள் மற்றும் ஆயத்த ஆடைகள் ஏராளமாக இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுவது உண்டு. அவையும் நின்று போய் விட்டன. இதனால் ஆடை உற்பத்தி நிறுவனங்கள் 30 சதவீதம் வரை பாதிக்கப்பட்டுள்ளன.

ஒரு பக்கம் நோய் வேகமாக பரவிக் கொண்டிருக்க இன்னொரு பக்கம் பொருளாதாரமும் வீழ்ச்சியை சந்தித்துக் கொண்டிருந்தால் 'சார்ஸ்' உலகையே ஒரு குலுக்கு குலுக்கி விடும் என்றே எதிர்பார்க்கப் படுகிறது.

'எய்ட்ஸ்' கூட ஏற்படுத்தாத பீதியை இன்று 'சார்ஸ்' ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இது எங்கு போய் முடியப் போகிறதோ தெரியவில்லை.

எப்படியாவது நோயை கட்டுப்படுத்தி விட வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு பலன் கிடைக்க வேண்டும் என்று இறைவனை பிரார்த்திப்பது தவிர வேறு வழி தெரியவில்லை.

---

## வீதியைப் புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

அராலி,ஏப்.27

மூளாய் பிரதான வீதியிலிருந்து குறுக்காகச் செல்லும் கல் வீதியை தாரிட்டு செப்பனிடுமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களைக் கடிதம்மூலம் கோரியுள்ளனர்.

மாரிகாலங்களில் இவ்வீதியால் போக்குவரத்துச் செய்வோர் பெரும அசௌகரியங்களுக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் - அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-14)

## கசிப்பு உற்பத்தியாளர் பொலீஸாரிடம் சிக்கினார்

இணுவில்,ஏப்.27

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் பொலீஸாரிடம் கையும் மெய்யுமாக அகப்பட்டுக்கொண்டார்

இச்சம்பவம் உரும்பிராய் மேற்கு அன்னங்கைப் பகுதியில் கடந்த வியாழன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் இரவு 7.30 மணியளவில் அப்பகுதிக்கு வந்த பொலீஸாரே கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவரைக் கைதுசெய்ததாகக் கூறப்பட்டது. (எ-49)

---

# ஆறாத்துயரம்



கரம்பொன் மண் பெற்றெடுத்த
தவப்புதல்வன் மேதகு ஆயர்
**வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை**
தமது 86ஆவது வயதில் (25. 04. 2003) காலமான
செய்தி கேட்டு ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும்
**பங்குத் தந்தையும் பங்கு மக்களும்,**
கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயம்.

(17281)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 14 - 05 - 1944



உதிர்வு 28 - 03 - 2003

## திருமதி வீரசிங்கம் சாவித்திரி

திதி : 27.04.2003

பாசமுடன் எம்மை வளர்த்த பரிவான அன்னையே!
நேசமுடன் எம்வாழ்வை வளமாக்கி வைத்தீரே!
வாடி நிற்கின்றோம் வண்ணமுகம் காணாமல்
சிறகிழந்து தவிக்கின்றோம் மீண்டு வரமாட்டாயோ?
பாவிகளாய் இப்பாரினில் பரிதவித்து நிற்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அரசடி வீதி,
இருபாலை.
(17293)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

# நெஞ்சை விட்டகலா 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 10 - 10 - 1980



மண்ணின் மடியில் 27 - 04 - 2001

## கப்டன் சாந்தீபன்

**கா.திருநீலகண்டன் பாலசபேசன்**

தமிழினத்தின் விடிவுக்காய் உனது உதிரத்தினால்
வரலாறு எழுதி வீரகாவியம் படைத்த தியாகச்சுடரே!
சாந்தீபனே! நீ இவ்வுலகை விட்டுப்பிரிந்தாலும்
உன் தியாகத்தினை எம் மண்ணும் மக்களும்
என்றென்றும் நினைத்திருப்பர். உனது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

No.-14, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(17292)

என்றும் உன் நினைவுடன்
குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்

## செல்வி செல்வலிங்கம் சங்கீதா (கீதா)

(2ஆம் வருட கலைப்பிரிவு மாணவி, யாழ். பல்கலைக்கழகம்,
. வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி பழைய மாணவி)

மகாத்மா வீதி, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி செல்வலிங்கம் சங்கீதா நேற்று (26.4.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி செல்வலிங்கம் தம்பதிகளின் அருமை மகளும் கோபிநாத் (மாணவன், ஹாட்லிக் கல்லூரி). அருந்தசா (மாணவி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்பட்டு ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகாத்மா வீதி,
நெல்லியடி,கரவெட்டி.
(17279)

தகவல்:
சி.செல்வலிங்கம்
(தந்தை)

---

# காணவில்லை



சோதிவேம்படி வீதி, மானிப்பாயைச்
சேர்ந்த
**பாலசுப்பிரமணியம் யசிதரன்**
(வயது 15)

என்பவரைக் கடந்த 23.04.2003 புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் காணவில்லை. இவரின் உயரம் 5' 4", இறுதியாக நீலநிற பெட்டி (BOX) சேட்டும் கறுப்புநிற நீளக்காற்சட்டையும் அணிந்திருந்தார்.

தொடர்பு:- சி.பாலசுப்பிரமணியம்.
சோதிவேம்படி வீதி, மானிப்பாய்.

(17285)

---

**The Wendy Whatmore Academy**
**of Speech & Drama**
**Announces opening of**
**Jaffna Centre, Classes in Spoken English**
*Commencing on 1st of May 2003*
*Teacher in Charge*
**Mrs.Jeyapoopathy Kulasingham**

**Hero Traders**
Navindil, Karaveddy
T.P. : 021-2263165
Contact the Academy

Principal
Mrs.Wendy Holsinger
No.5, 13th Lane, Colombo - 3.

T.P.:-573913, 075-332179

(C/27576)

---

# துயர் பகிர்வோம்

முன்னாள் யாழ்.கத்தோலிக்க திருச்சபையின் தலைவரும்
ஈழத் தமிழர் சமுதாயத்தின் மதிக்கப்படும் பெரியாருமாகிய
இளைப்பாறிய கத்தோலிக்க யாழ்.ஆயர்

## மேதகு செபஸ்தியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை

அவர்கள் 25.04.2003 வெள்ளிக்கிழமை காலமாகிய செய்திகேட்டு எமது ஆழ்ந்த துயரையும் இதய அஞ்சலியையும் தெரிவித்து நிற்கின்றோம்.

கிளிநொச்சி. (17287) தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.

---

# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி மரியராசா பிலசித்தம்மா தவரஞ்சிதம்
அவர்களின் அன்புத் தந்தையார்

## தொம்மை பிலிப்

அவர்கள் காலமாகியதையிட்டு எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு,அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொடிகாமம்
திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.
(17286)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

---

# பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து
வேலை செய்ய அல்லது
நாளாந்தம் வந்து போகக்
கூடிய பணிப் பெண் தேவை.
தொடர்பு : T.P. 071-347564

(17253)

---

# முக்கிய அறிவித்தல்

G.A.Q., B.A. I,II - யாழ்.-2003
வினா விடை வகுப்புக்கள்
26-04-03 - 04-05-03வரை
G.A.Q - 2004,
B.A. பேராதனை-2003
புதிய பிரிவுகள்
தமிழ் : க.தர்மராஜா
விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
நியூட்டன்
யாழ்நகர்.

(17264)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வழிபாடு' என்னும் தளத்தில் நின்று இளையோரும் முதியோரும் கருத்துப் பரிமாற களம் அமைப்போம்!

இந்துசமய கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் அடுத்த மாதம் 2ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ள இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

மனிதன் வாழ்க்கையில் அமைதியைத் தேடும் காலமிது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் தொழில்நுட்பத்தின் வலிமையும் மனித வாழ்க்கையை வேகமாக்க, அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் மனிதன் சோர்ந்து நிற்கும் வேளையில் அமைதிக்கான வழியை யாராவது சுட்டிக்காட்டினால் அது பேருதவியாக இருக்கும். எமது முன்னோர்களின் வழிகாட்டல் எமக்கு ஒரு சிறந்த கையளிப்பாக விளங்கு வதை நாம் மறப்பதற்கில்லை. இன்று 'வழிபாடு' என்னும் வழிகாட்டல்தான் எம் வாழ்வை அமைதியாக நடத்திச்செல்ல நல்லதோர் துடுப்பாகும். கூட்டு வாழ்க்கை சிதறிவிடாமல் வழிபாடு காத்துநிற்கிறது. மனித உள்ளத்தைக் கருணை வழியில் நடத்தி அன்புநெறி வயப்படுத்தும் வழிபாடு நமது இளந் தலைமுறையினரையும் இணைத்து நிற்கிறது.

இளமையின் துடிப்பான ஆற்றலை முதுமையின் பட்டறிவோடு தொடர்பு கொள்ளச் செய்யும் பொதுமையான ஒரு முறைமையாக வழிபாடு விளங்குகிறது. அழகையே விரும்பி நிற்கும் இளந்தலைமுறையினருக்கு ஒரு பண்பாட்டுக்கற்கைநெறி தேவை. துருதுருத்த பார்வையும் படபடத்த செயற்பாடும் பயன்பாடாக, பலர் சேர்ந்து வாழும்போது வாழ்க்கை பூஞ்சோலையாகும். அந்தப் பூஞ்சோலையின் தோற்றமே வழிபாட்டின் பெறுபேறாகும். அழகை நாடும் இளம் உள்ளங்கள் அதனைத் தமது செயற்பாட்டினால் உருவாக்கும்போது மகிழ்ச்சி அடைவா. கூட்டுறவு நிலையில் உருவாகும் மகிழ்ச்சியை எமது முன்னோர் நன்கு உணர்ந்திருந்தனர்.

தொழில் நிலையில் மனிதவலு மட்டுமே பயன்படுத்தப்பட்ட காலத்தில் கூட்டு வாழ்க்கை இயல்பானதாக இருந்தது. ஆனால், இன்று விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மனித வலுவை மதிப்பிழக்கச் செய்துவிட்டன. மனிதனுடைய எண்ணங்கள் யாவும் செயற்கை நிலையாக மாறிவிட்டன. இந்த மாற்றம் இளைய தலைமுறையினரிடம் வெளிப்படையாகவே தோன்றுகின்றது. அதனால், முதியோர் பல முரண்பாடுகளை எதிர்கொள்ளவேண்டியவர்களாக உள்ளனர். இது ஒரு வகையில் இயற்கைக்கும் செயற்கைக்கும் உள்ள முரண்பாடாக அமைகிறது எனலாம்.

இந்த முரண்பாட்டை நீக்கினால் வாழ்வில் அமைதியும் மகிழ்வும் தோன்ற மனிதப் பிறவியும் சிறப்படையும் எனவே இந்த முரண்பாடு நீங்க என்ன செய்யலாம் என்பதைப் பற்றி எல்லோரும் எண்ணிச் செயலாற்றவேண்டியுள்ளது. அழகு என்பது தூய்மையிலும் ஒழுங்கிலும் பொதிந்து கிடப்பதை இயற்கை எமக்கு உணர்த்தி நிற்கும். ஓடும் நதியும், பாடும் பறவையும் மலரும் பூவும் அழகையும் ஒழுங்கையும் விளக்க அதை நாம் உன்னிப்பாக நோக்கும் போது உணர்வில் இன்பம் துளிர்க்கிறது நாள்தோறும் அந்த அழகைக் காண கண்ணும் உள்ளமும் விழைகின்றன. அதுவே ஒரு வழிபாடாக மாறுகிறது.

**கலாநிதி**
**மனோன்மணி சண்முகதாஸ்**
**இல்லத்திட்டப் பணிப்பாளர்,**
**சைவ வித்தியா விருத்திச் சங்கம்,**
**திருநெல்வேலி.**

இயற்கையின் நல்லொழுங்கை இளையவர் காணவும் அதுபற்றி எண்ணிப் பார்க்கவும் ஒரு பயிற்சிக்கூடம் இன்றியமையாதது. இளந்தலைமுறையினரின் உடல் உழைப்பை இப்பயிற்சிக் கூடத்தின செயற்பாட்டில் இணைக்கும்போது புதிய ஆற்றலுடன் கூடிய வழிபாட்டு நடைமுறை தோற்றம் பெறுகிறது. துள்ளித்திரியும் கால்களுக்கு பொன்னால் சதங்கை கட்டிவிட்டால் அதன் ஓசை எல்லோரையும் ஈர்க்கும் அதேபோல இளையோர் செயற்பாடுகளில் இணைந்திருக்கும் ஒலி அரவத்தை பண்ணோடு இசைந்த பாட்டாகப் பயிற்றினால் பலரது செவி குளிரும். சேர்ந்து இசையோடு பாட மனம் இசையும் அந்தக் கூட்டுறவு நிலையில் ஒரு பரவசம் இணையும். அதுவே அமைதியின் களமாய் அன்பின் விளைநிலமாய்த் தோன்றும்.

செயற்பாட்டு நிலையில் இளையோர் காட்டும் வேகம் தொண்டுப் பணி நிலையில் பயன்படுத்தப்பட்டால் அதன் பெறுபேறு மிக உயர்ந்தது. 'தொண்டு' என்பது பிறர் சுமையைத் தன் தோளில் தாங்கும் பரிவான தொழிற்பாடு அதனை இளையோர் உள்ளம் நாடும் வண்ணம் முதியோர் வழிகாட்டவேண்டும். பிறர் துயர் கண்டு மனம் கரைந்து உடன் சென்று உதவும் கரமாய் தொழிற்படுகையில் தொண்டுப பணி கடவுட் பணியாகிவிடும். மனித விழுமியங்களை வளர்க்க இந்தப் பயிற்சியை எப்படி நல்கலாம் என்ற வினாவும் எம்மிடையே தோனறக்கூடும். எனவே இளைய தலைமுறையினரை ஒன்றிணைத்து இது பற்றி அவர்களோடு கலந்துரையாடுவதே சாலச்சிறந்த வழியாக அமையும் இத்தகைய கலந்துரை யாடல் இறுகிக் கிடக்கும் இளையோர், முதியோர் தொடர்பாடலை இளகச் செய்துவிடும்; அன்புநிலையில் கூட்டுறவு கொள்ளச் செய்யும் ஆனால் இதற்கென ஒரு வாய்ப்பினை ஏற்படுத்துவது எப்போது? காலத்தின் விரைவான சுழற்சிப்போக்கிலே காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும் பாங்கிலே தற்போதைய அமைதிக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் வேளையிலே இதனைச் செயற்படுத்த ஆவன செய்யலாம்.

விஞ்ஞானத்தின் விந்தையைக் கண்டு வியக்கும் வேளையில் அது இயற்கையோடு வெற்றிகொள்ளமுடியாமல் தோற்றுப் போகும் நிலையைக் கண்டு இன்று நாம் திகைப்படைகிறோம். மனிதமூளையின் தொழிற்பாட்டை முற்றாக நம்பி வாழமுடியாத அவலத்தால் அமைதியைத் தேடும் நிலை வந்துள்ளது. இளையோர் இன்னும் விஞ்ஞானத்தின் மேல் அசையாத நம்பிக்கை கொண்டவர்களாக அது வாழ்க்கையில் அமைதியையும் இன்பத்தையும் தரவல்லது என்று கருதி முதியவர்களோடு முரண்பட்டு நிற்கின்றனர். எமது மண்ணிலே நாம் கடநத காலங்களில் நடந்த துன்பநிகழ்வுகள் இளையோர் உள்ளத்திலே விஞ்ஞானம் பற்றிய அசையாத நம்பிக்கையையும் சற்று ஆட்டம் காணவைத்துள்ளது. எனினும் அதனை அவர்கள் உள்ளம் முற்றாக ஏற்கமுடியாமல் தவிப்பதையும் காணமுடிகிறது.

செய்கை மனிதனை உருவாக்கச் செயற்படுத்த வைக்கலாம் என்ற பகற்கனவு அவர்கள் உணர்வில் உருக்காட்டி நிற்கிறது. மனிதனுடைய இயற்கை நிலையான செய்பாடுகளையும் விஞ்ஞானத்தின் வலுவால் மிகைப்படுத்தி இரவைப் பகலாக்கி முதுமையை இளமையாக்கி இயற்கையின் போக்கையே வென்றுவிடலாம் என எண்ணுகிறார்கள். இந்த எண்ணத்தினைக் கலைத்து அவர்கள் வாழ்க்கையின் இலக்கைச் செம்மைப்படுத்த வேண்டுமா? இயற்கை நிலையை அதன் பேராற்றலை வணங்கிப் பணிந்து வாழவேண்டுமா? இந்த வினாக்களுக்கான தெளிவான விடையை நடைமுறை வாழ்வியல் சான்று கொண்டு நிறுவ ஒரு கருத்துக்களம் தேவையாக உள்ளது.

இளைய தலைமுறையின் வாழ்வியற் பட்டறிவு குறைவாக இருந்த போதும் அவர்கள் பெற்ற விஞ்ஞான அறிவின் துணை கொண்டு விளக்கம் கூறமுடியுமா? இது அவர்களுக்கு முன்னே வைக்கப்படும் சவாலாக இன்று விளங்குகிறது.

இருபத்தியோராம் நூற்றாண்டில் எல்லோரும் இணையத்தளத்திலே தொடர்புகொள்ளும் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. எனினும் அத்தளத்திலே நின்று உரையாடாமல் நேரிலே நின்று உரையாட ஒரு கருத்துத் தளம் அமைத்து இரு தலைமுறையினரும் உரையாட ஒரு வழி செய்யவேண்டும். இளையோர் தம் எண்ணத்திலே உறைந்திருக்கும் ஐயங்களை நேருக்குநேர் நின்று உரையாடித் தெளிய ஒரு வாய்ப்பு உருவாக்கப்படவேண்டும். விஞ்ஞான வழியின் தடத்திலே நின்று பழைய மெய்ஞ்ஞானத தடத்தினையும் உற்றுநோக்கவேண்டும். இரண்டு கண்களே காட்சியைக் காண எமக்குண்டு. ஆனால் மூன்றாவது கண்ணும் உண்டு என்பதை உணர்ந்தவரும் உண்டு. எல்லோரும் ஒன்று கூடி கருத்து நிலையில் உறவாட ஒரு தெளிவு உறுதியாகப் பிறக்கும்.

ஐவகை நிலத்தில் ஐம்பொறியும் ஐம்புலனுமாய் வாழ்வு நடத்திப் பெற்ற அனுபவ நிலையை இன்று எல்லோராலும் தெளிவாக உணர முடியாமலுள்ளது. எனினும் நிலத்தியல்பு திரிபடையவில்லை என்பதை உணர வைக்கவேண்டிய கடமை முதியோருக்குண்டு. நிலத்தின் இயல்புக்கு ஏற்ப வாழ்வியல் நடைமுறைகளில் சில வேறுபாடுகள் இருந்தபோதும் 'மனிதம்' என்ற நலையில் உணர்வல் ஒன்றுபட்டிருந்ததை எல்லோரும் தெளிவாக அறிய 'வழிபாடு' என்ற மரபு நிலைத்துள்ளது. இந்த மரபின் தொடர் சங்கிலிப் பிணைப்பை அறுத்துவிடாமல் மனித வழிநடைப்பயணம் நடைபெறவேண்டும்.

முன்னோர் சென்ற ஒற்றையடி வழிநடை இன்று பெருந்தெருவாய் எல்லோரும் இடரின்றி நடந்து செல்லப் பயன்படுகிறது. தன்பிறப்பின் தேவை உணர பலர் பயன்பெற பாழும் வாழ்வியல் முறையறிய ஒரு கருத்தரங்குக்களம் தேவை. அக்களத்திலே எல்லோரும் கூடி உரையாடி ஐயம் தீரவேண்டும். அதுவும் மிகவிரைவிலே செயற்பாடாகவேண்டும் பிஞ்சும், பூவும், காயும், கனியும் என ஒரு மரத்தின் தோற்றம் இயற்கையொழுங்கில் ஓர் இனிய வாழ்வு நடப்பததைக்காட்டி நிற்கிறது. இது மனித வாழ்வியலிலும் நடக்கவேண்டும். அதற்கென ஒரு வழிபாட்டு மரபு எமது முன்னோரால் உருவாக்கப்பட்டு காலத்தால் அழியாமல் பேணப்பட்டு வந்துள்ளது. முன்னோர் வழியிலே செல்ல ஐயமிருப்பின் தலைமுறையினர் யாவரும் இணைந்து ஆய்ந்து தெளிவு பெறுவதே நன்று. ★

## இந்து மாநாட்டை முன்னிட்டு நடத்தப்பட்ட
# கட்டுரை, பேச்சு, பண்ணிசை போட்டி முடிவுகள் வெளியாகின
### யாழ். மாணவர் ஐந்து பேர் தங்கப்பதக்கம் பெறுவர்

யாழ்ப்பாணம்,ஏப்.27

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு இரண்டாவது உலக இந்துமாநாட்டை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்திய கட்டுரை, பேச்சு, பண்ணிசைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட இந்தப் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களின் பெயர், பாடசாலை விவரம் முறையே வருமாறு:

**கட்டுரைப் போட்டி**

★ கீழ்ப்பிரிவு

ச.ரகுராஜ் ( சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ச.சயிந்தன்(கிளிநொச்சி இந்துக் கல்லூரி), என்.தர்மிஜா(புத்தளம் இந்து தமிழ் மகாவித்தியாலயம்)

★ மத்திய பிரிவு

வி.யாழினி (கண்டி விகாரமகாதேவி வித்தியாலயம்), கு.ஹம்சாயினி (முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயம்), ஜனனி தில்லைநாதன் (மட்டக்களப்பு வின்சன் மகளிர் கல்லூரி)

★ மேற் பிரிவு:

ரா.ருக்சான்(பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), பா.மகியினி (யாழ்.மகாஜனாக் கல்லூரி), இளஞ்சிங்கம் (மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை)

**பேச்சுப் போட்டி**

★ கீழ்ப் பிரிவு:

சே.நிஷாந்(பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), என்.தர்மிஜா(புத்தளம் இந்து தமிழ் வித்தியாலயம்), வி.ஜெனன் (வவுனியா கல்மடுக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை)

★மத்திய பிரிவு:

ம.மயூரா(யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), த.அதிஷ்டப்பிரதா (நீர்கொழும்பு விஜயரத்தினம் தமிழ் மகா வித்தியாலயம்), ப.நேரோஜினி (புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்)

★ மேற் பிரிவு:

நீ.நிஷாந்தனன்(றோயல் கல்லூரி), ச.விஜயசாந்தி(கொழும்பு விவேகானந்த தேசியப் பாடசாலை), தே.டசிகா (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**பண்ணிசைப் போட்டி**

★ கீழ்ப் பிரிவு:

தெ.பவனுஜா(யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), வீ.பிரவீணா (கொழும்பு சைவ மங்கையர் கழகம்), க.[illegible] (திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி).

★ மத்திய பிரிவு:

ஜே.வைஷ்ணவி(மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), ம.தயாபரன்(யாழ்.மத்திய கல்லூரி), கு.ஜெகதீசன்(யாழ்.யூனியன் கல்லூரி).

★ மேற் பிரிவு:

ந.தனசொரூபி(கொக்குவில் இந்துக் கல்லூரி), த.மதுமிதா(முல்லைததீவு வித்தியானந்தா தமிழ் வித்தியாலயம்), சு.கபிலன் (யாழ்.சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

மேற்படி மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதி காலை 10.00 மணிக்கு வெள்ளவத்தை இராம கிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என போட்டி ஒருங்கிணைப்பாளர் ம.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப் பதக்கம் என்பனவும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (எ-ரி)

## ஆலயங்களுக்கு நந்திக்கொடி விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.27

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு, இந்த சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் நநதிக்கொடிகள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்கள் மற்றும் இந்து மன்றங்கள் அனைத்திற்கும் இந்த நந்திக் கொடிகள் வழங்கப்படவுள்ளன என இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.பிராந்திய உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ்வித்தகர் சிவ மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

மேற்படி நிறுவனங்கள் தத்தமது கடிதத் தலைப்பில் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தினை யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகத்தில் சமர்ப்பித்து நந்திக் கொடிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (எ-6)

## நீர்வேலிப் பகுதியில் வலுக் குறைந்த மின்சாரம்

அரியாலை,ஏப்.27

நாவேலிப் பகுதிக்கு விநியோகிக்கப்படும் மின்சாரம் இரவு நேரங்களில் வலுக் குறைந்து காணப்படுவதாக பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

இரவு நேரங்களில் மின்சாரத்தின் வலு குறைந்து, மின்குமிழ்கள் மங்கிய நிலையில் ஒளிர்கின்றன. இதனால் [illegible] களுக்கு மின்சாரத்தைப் பாவிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.(ஐ-17)

## தபாலகக் கட்டடப் பணிகள் விரைவில் பூர்த்தி அடையும்

அரியாலை,ஏப்.27

யாழ்.பிரதம தபாலகத்துக்கான புதிய கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

தற்போது கட்டடத்திற்கான கூரை அமைக்கும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

தபாலகத்திற்கென நவீன வசதி கொண்டதாக அமைக்கப்பட்டுவரும் இந்தக் கட்டடப் பணிகள் முடிவடைய இன்னும் சில மாதங்கள் எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

முற்றவெளியில் முன்பு தபாலகம் அமைந்திருந்த பகுதியிலேயே இந்தப் புதிய தபாலகம் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-17)

## வெற்றி விழாவுக்கு பளை செல்ல இலவச சேவை

கொழும்புத்துறை,ஏப்.27

பளையில் நாளை திங்கட்கிழமை ஆனையிறவுச் சமர் மற்றும் 'தீச்சுவாலை' முறியடிப்பு ஆகியவற்றின் வெற்றிவிழாக்களில் பொதுமக்கள் கலந்துகொள்வதற்கு வசதியாக இலவச போக்குவரத்து சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் நல்லூர், யாழ். கோட்டப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தெரிவித்துள்ளார். மேற்படி வெற்றி விழாவில் கலந்துகொள்ள விரும்புவோர் தமது பயணத்தை நல்லூரில் இருந்து மேற்கொள்ள முடியும் என்றும் -

அவர்கள் முற்கூட்டியே விடுதலைப் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர்களுடன் தொடர்புகொள்ளுமாறும் - அவர் கேட்டுள்ளார்.(ஒ-30-173)

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

அரியாலை,ஏப்.27

நீர்வேலியில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2மணிக்கு மாட்டு வண்டிச் சவாரி போட்டி நடைபெறும்.

நீர்வேலி சவாரித்திடலில் போட்டி இடம்பெறும். (ஐ-17)

## கோம்பையன் மணல் அருகே கழிவுப் பொருள்கள் கொட்டுவதற்குத் தடை

கோம்பையன்மணல் மயானத்தின் எல்லைப்பகுதிகளிலும் அதனை அண்டியுள்ள வயல் ஓரங்களிலும் கழிவுப் பொருள்கள் வீசப்படுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாக அப்பகுதிக்கான கிராம உத்தியோகத்தர் செல்வி செ.தி.சகுந்தலாதேவி அறிவித்துள்ளார்.

மேற்படி பகுதிகளில் கழிவுப் பொருள்களை வீசுபவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதைத் தடை செய்யும் வகையில் இந்தப் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (எ-6)

## பொதுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.27

-யாழ்.மாவட்ட சிக்கன' கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சமாசத் தலைவர் ச.முருகனேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-ரி)

★ ★ ★

கோப்பாய்,ஏப்.27

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரி பொது மண்டபத்தில் அதிபர் த.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது. காலை நிகழ்வாக கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கிரிக்கெட் போட்டிகள் இடம்பெறும்.(எ-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

மிருசுவிலில் பயன்தரு மரங்கள் நிறைந்த 25 பரப்புக் காணியில் அமைந்த வீடும், 5 பரப்புக் காணியில் அமைந்த வீடும் (தனிக் கிணறுகள் உண்டு) விற்பனைக்குண்டு தொடர்பு: 01 332 609 (17274)

உசன் மிருசுவிலில் பயன் தரு மரங்களுடன் கூடிய 41/2 பரப்பு காணி யும் வீடும் தண்ணீர் வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 01-473318 (17275)

கந்தர்மடம், யா/இந்து மகளிர் கல்லூரிக்கருகில் அரசடி வீதியில் சகல வசதிகளும் கொண்ட மாடிவீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு 149, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P. 0777-062641, 021-222 - 2171. (16899)

அப்பிளானை, கோப்பாய் மத்தியில் 11/2 பரப்பில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: திருஞானசம்பந்தர் அப்பிளானை கோப்பாய் மத்தி. (17239)

## விற்பனைக்கு

TaTa 1210 1/2 Body Lorry 42தொடரிலக்கமுடையது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 16, கண்டி வீதி, சாவகச்சேரி. (17261)

இரும்புப் பெட்டி 2, தையல்மெசின், பனைமரங்கள், தகரங்கள் மற்றும் வீட்டுப் பாவனைப்பொருள்கள் என்பன (வீட்டுப் பாவனையில் இருந்தவை) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.10, உடையார் லேன் பழம்வீதி, கந்தர் மடம். (17254)

பாவித்த Sony 14" - 21" - 2199 - 26,000/- , 2185 - 19,000/-, 2184 - 18,500/-, G21Q - 23,000/- T.V. க்களும் National/Panasonic டெக் வகைகள் 6,500/- தொடர்பு: R.மகேஸ்வரன், K.K.S. வீதி, (சிறுவர் பூங்கா - RDS முன்பாக) மல்லாகம்.(17267)

நல்ல நிலையிலுள்ள தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள், ரியூப லைற் பிறேம்கள் என்பன குறைந்த விலையில் உடன் விற்பனைக்குண்டு. ரவீந்திரன், ஆசிரியர், சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, (சினிரோன் தொலைத்தொடர்பு நிலையத்திற்கு முன்பாக) (17263)

நிறைகூடிய புறொயிலர் கல்பேட்ஸ், என்பன சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் தினமும பெற்றுக்கொள்ளலாம் தொடர்பு: 21/61 இராமநாதன் றோட், கலட்டி. (17271)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து உங்களுக்கு தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (17257)

புறொயிலர், கல்பேட் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். மான்ஸ் பாடசாலை வீதி, டச்றோட், உடுவில் (மீன்சந்தை முன்பாக), சுன்னாகம். (17175)

இறைச்சிக்கோழி (Broilers) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. கிருஷ்ணகுமார் (கிருஷ்ணா), விதானைவளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய். (17209)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 08-05-2003 வியாழக் கிழமை பிற்பகல் விநியோகிக்கப் படும். Mares Vaccine போட்ட சிவப்பு சேவல் குஞ்சுகள் 28.04.2003 பெற்றுக் கொள்ளலாம். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (17256)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

Pure bred Dobermann Pincher Great Dane Dachund நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (17256)

## கார் விற்பனைக்கு

Austin கார் மிகவும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீ கிருஸ்ணா, தபாற்பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. (17268)

## காணி விற்பனைக்கு

2ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணத்தில் 21/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளும் முகவரி: R.A.D. ஆனந்தராஜா, 386/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (17186)

இருபாலைச் சந்திக்கு அண்மையில், பருத்தித்துறை வீதியில், கற்பகப் பிள்ளையார் கோவிலுக்கு எதிரில் வடக்குப் பக்கமாக 861/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பெரிய அளவில் தொழில் ஆரம்பிப்பதற்கு ஏற்ற காணி, நேரடித் தொடர்புகட்கு T.P. 222 2390 அல்லது 39, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (17272)

## காணி தேவை

உடுவில் பிரதான வீதியிலும் கட்டுடை, சண்டிலிப்பாய், சங்கானை பிரதான வீதியிலும் 1-5 பரப்புக்குட்பட்ட காணி உடன்தேவை. முழு விவரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும். விள.இல.1868 உதயன். (17243)

ஆனைக்கோட்டை, நவாலி பிரதான வீதி, ஆனைக்கோட்டை (VC) மானிப்பாய் பிரதான வீதியிலும் 1-5 பரப்புக்குட்பட்ட காணி உடன் தேவை. விற்பனை செய்யவுள்ளோர் முழுவிவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1866 உதயன்.(17245)

## வீடு தேவை

பருத்தித்துறை நகரை அண்டிய பகுதியில் குடியிருப்பதற்கு உகந்த சகல வசதிகளையும் உடைய வீடு அல்லது வீடு கட்டுவதற்குரிய காணி விலைக்குத் தேவை. விற்க விரும்புவோர் விளம்பரதாரர், த.பெ.இ.14, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (17189)

## உடன் தேவை

யாழ்.நகரில் தனியார் கல்லூரி அமைக்க வீடு மற்றும் கட்டட வசதிகளோடும் அல்லது வெற்றுக் காணியுள்ளோர் தற்காலிக கொட்டகை அமைக்க வாடகைக்கு வழங்கவுள்ளோர் உடன் தொடர்புகொள்க. விளம்பர இல. 1867. உதயன்.(17244)

## வீடு வாடகைக்கு

மானிப்பாயை அண்மித்த பகுதியில் இரு அறைகள், இரு ஹோல்கள், சமையலறை, சுற்றுமதிலுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. (சைவ போசன முடையவர்களுக்கு மட்டும்) தொடர்பு: 077-209124, 021 222 3264. (17250)

## வாடகைக்குண்டு

சாவகச்சேரி தேவாலய வீதியை சேர்ந்த சட்டத்தரணியும் தற்போது இளைப்பாறிய மேலதிக நீதிவானும், மேலதிக நீதிபதியும் ஆகிய சிவகுரு சுரேந்திரனின் வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. தொடர்பு: திரு.சி. சற்குணநாதன் (B.M.C) 16, கண்டி வீதி, சாவகச்சேரி. (17260)

## தவறிவிட்டது

சிவபாதம் சிவரூபன் என்பவரின் தேசிய அடையாள அட்டை இல. (781320811V), கொக்குவில் சந்திக்கும் யாழ்ப்பாணத்துக்கும் .இடையில் 24.04.2003 வியாழக்கிழமை தவறிவிட்டது. தொடர்பு: ஆனைக்கோட்டைவீதி, கொக்குவில் மேற்கு கொக்குவில். (17273)

## மணமகள் தேவை

33 வயது, பூரம் 3ஆம் கால், செவ்வாயற்ற, கிரகபாவம் 55, உயரம் 5'6", யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, ஐரோப்பிய நாட்டில் நிரந்தர பிரஜாவுரிமை உடைய தற்போது யாழ். வந்துள்ள மணமகனுக்கு படித்த, அழகான, நற்குணமுள்ள மணமகள் தேவை. முழுவிவரத்துடனும் தொடர்பு. விளம்பர இல.1859, மே/பா உதயன்.(17132)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, ஆஸ்திரேலியா பிரஜை 62ஆம் ஆண்டு பிறந்த 5'6" உயரமுள்ள சுவாதி நட்சத்திரம் தற்போது யாழ். வந்திருக்கும் மணமகனுக்கு அழகிய படித்த 35 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. சாதகம் அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் (திருப்பி அனுப்பப்படும்) தொடர்பு கொள்ளவும Mrs. J.நவரத்தினம் C/o K.S. நவரத்தினம் ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில். T.P 222 3295. (17142)

## திருமண சேவை

எம்மிடம் பல தரப்பட்ட இந்துசமய, கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மணமகன்களது, மணமகள்களது விவரங்கள், திருமண நிறை வேற்றுதலகளுக்காக பதிவு செய்யப்பட்டு வருகின்றன. உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களது விவரங்களும் இருக்கின்றன. உங்கள் திருமண நிறைவேற்றுதல்களுக்கு தொடர்பு கொண்டு திருமணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். Multy Top Marriage Service, No. 25, Frankfurt place Colombo - 4. 074 516289, 0777 569194 (சி-27473)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 28, உத்திரட்டாதி B.Sc. பெண்ணுக்கும் 31வயது, அவிட்டம், 5'10" உயர எஞ்சினியருக்கும் தகுந்த மணமக்களை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (ஜாதம் இயலுமானால் படத்துடனும் விண்ணப்பிக்கவும்) விளம்பர இல. 1870 மே/பா உதயன்(17259)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, படித்த, 1972இல் பிறந்த, ரேவதி நட்சத்திரமும் உதயச் செவ்வாய், பாவம் 21இல் உள்ள பொதுநிறமான, நற்குணமுள்ள மணமகளுக்கு பெற்றோர் வடமராட்சி, தென்மராட்சி, பிரான்ஸ், U.K., நோர்வே மணமகனை எதிர் பார்க்கின்றனர். சீதனமுண்டு. தொடர்பு: விளம்பர இல.1869 மே/பா உதயன். (17251)

36வயதுடைய, கிறிஸ்தவம், பண்புள்ள, அழகிய, சிறந்த பெண்ணிற்கு மணமகன் தேவை. சீதனமாக பணம் வழங்கப்படும். முற்போக்கு சிந்தனை உள்ளவர்களும் சாதி, சமயத்திற்கு அப்பாற்பட்டவர்களும் தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: விளம்பர இல.1865 C/o உதயன். (17217)

## A/L இணைந்த கணிதம்

தனியாகவோ, குழுக்களாகவோ வகுப்புகள் நடைபெறுகின்றன.

தெடர்புகளுக்கு-
பாலா
45/1, நாயன்மார் வீதி, நல்லூர்,
(நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு அருகில்)
தொ.பே. 0777-740549
(17265)

## ஆள்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் கல் உடைக்கும் தொழிற்சாலைக்கு இயந்திரத்தில் வேலைசெய்ய முன்னனுபவம் உள்ளவர்கள் தேவை. (பகல், இரவு மாறி வேலை செய்யக் கூடியவர்கள் விரும்பத்தக்கது).

தொடர்பு:-
**T.செந்தில் செல்வன்**
கிராம்புவில்,
சாவகச்சேரி
T.P.070-212300
(17262)

---

Four Star விளையாட்டுக்கழகம் நடத்தும்
Four Star வெற்றிக்கிண்ணத்துக்கான

### மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

- திறந்த போட்டிகள்
- 21வயதிற்கு உட்பட்டோருக்கான போட்டிகள்

**விண்ணப்ப முடிவு திகதி:-05-05-2003**

விண்ணப்பப்படிவங்கள் கிடைக்குமிடங்கள:

☆ லொயலர்ஸ்
*இல. 145, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*

☆ குமரன் தொலைத் தொடர்பகம்
*இல,27, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.* (17276)

---

***G.C.E. (A/L)*** **பரீட்சைப் பெறுபேறுகளுக்காக**
**காத்திருக்கும் மாணவர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்...**

SRI - LANKA INSTITUTE OF
TOURISM & HOTEL MANAGEMENT - JAFFNA

**இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹொட்டேல் முகாமைத்துவம் - யாழ்ப்பாணம்**

(FORMER CEYLON HOTEL SCHOOL
& SCHOOL OF TOURISM)
Study entirely in Sri lanka & earn
an Internationally Recognized

### Diploma in Hotel & Catering Management

பாடங்கள் ஆரம்பம்: ஜூன்/ஜூலை 2003
வயது 10.05.2003 அன்று 17 இற்கும், 25 இற்கும் இடையில்
வ'ண்ணப்ப முடிவு திகதி **10.05.2003**

| கற்கை நெறிகள் | ஆகக்குறைந்த தகைமைகள் |
| --- | --- |
| **New Admission** | |
| Hotel Reception *(5 Months)* Hotel House Keeping *(5 Months)* | இரண்டு அமர்வுக்கு மேற்படாது *G.C.E. (O/L)* இல் 6 பாடங்கள் (3 பாடங்கள் திறமைச்சித்தியும் ஆங்கிலம & கணிதம் சாதாரண சித்தி போதுமானது |
| **Re Admission** | |
| Hotel Reception *(5 Months)* Hotel House Keeping *(5 Months)* | 1) ஹொட்டல் பாடசாலை பரீட்சைகளில் A or B சித்தி பெற்றவர்கள் 2) 30.06.2003 இற்குள் IT பயிற்சியை முடித்தவர்கள் 3) 3.7.2003 இற்குள் IT பயிற்சிப் பெறுபேறுகள் இங்கு கிடைக்கக்கூடியதாக இருப்பவர்கள் |
| **Craft level** | |
| Hotel House Keeping *(4 Months)* | இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்கள் சித்தி (ஆங்கிலம் சித்தயும்) |

*குறிப்பு:-*

1) விண்ணப்பப் படிவங்களை ரூ.50/= செலுத்தி அலுவலகத்தில் கற்கை நெறிகள் பற்றிய தெளிவான விவரங்களுடன் பெற்றுக் கொள்ளலாம்.
2) ரூ.50/= மணிஓடர் மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெறவிரும்புவோர் சுய முகவரியிடப்பட்ட நீளத் தபால் உறையுடன் ரூ.4.50 முத்திரையும் சேர்த்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.
3) ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**Principal,**
***SRI LANKA INSTITUTE OF TOURISM & HOTEL MANAGEMENT,***
*15, Sirampiady lane,*
*Maniams Building (Near IT Park)*
*OFF STANLEY ROAD*
*JAFFNA - 021 - 2223642*
(17258)

**MINISTRY OF TOURISM**

---

### பொன்னாலை காரைநகர் பிரதான வீதி ஓரமாக கடற்பகுதியில் மர மின்கம்பங்கள் நிறுத்துவதற்கான கூறுவிலை கோரல்

கூறுவிலைஇல.DGM/NP/2003/15

மேற்படி வேலைக்கான கூறுவிலைகள் தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இலங்கை மின்சார சபை வடமாகாண கேள்விச்சபையால் கோரப்படுகின்றன.

**வேலை விவரம்**

பொன்னாலை காரைநகர் பிரதான வீதியின் கடற்கரையோரமாக அமைக்கப்பட்டிருந்த 11KV மின் மார்க்கத்தை மீண்டும் புனரமைப்பதற்கு தேவையான இரட்டை மர மின்கம்பங்களை 44 இடங்களில நாட்டுதலும், கொங்கிரீட் இடுதலும்.

மேற்படி கூறுவிலைகளுக்கான கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவங்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 250/- செலுத்தி எனது அலுவலகத்தில் 2003.04.28 ஆம் திகதி தொடக்கம் 2003.05.05ஆம் திகதி வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவங்களின் மூலப்பிரதி வேறாகவும், இணைப் பிரதி வேறாகவும் கவரிடப்பட்டு கவரின் இடதுபக்க மேல்மூலையில் கூறுவிலையின் இலக்கம் குறிப்பிடப்பட்டு எனது அலுவலகத்திற்கு (பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகம்) தபால் மூலமாகவோ நேரடியாகவோ 2003.05.06 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பிவைக்கப்பட வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகள் அன்றைய தினம் காலை 10.00 மணிக்கே திறக்கப்படும்.

தாமதமாகவும், எம்மால் வழங்கப்பட்ட கூறுவிலைப் பத்திரங்கள் மூலம் சமர்ப்பிக்கப்படாத கூறுவிலைகள் நிராகரிக்கப்படும்.

பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம்.
**இலங்கை மின்சார சபை,**
*536/1, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தலைவர்
**வடமாகாண மின்சார சபை,**
கேள்விகோரல்

**"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குக் கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை"** (சி-27575)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவன அனைத்து வருட (பகல், மாலை) மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

(எ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.27

நெல்லியடியில் 2002 டிசெம்பர் 10 ஆம் திகதி பொதுமக்கள் மீது ஸ்ரீலங்கா பொலீஸார் மேற்கொண்ட கொடூரத் தாக்குதல் சம்பவம் குறித்து சலன சித்திரம் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள 'யாருக்கு யார் காவல்?' என்ற முழுநீள விவரணத் திரைப்படத்தின் விமர்சனக் காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

(ரி)

## செஞ்சிலுவையுடன் உடன் தொடர்பு கொள்ளக் கோரிக்கை

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் யாழ்.அலுவலகத்துடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு பின்வருவோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அழைக்கப்பட்டுள்ளோரின் பெயர் விவரம் வருமாறு:-

ரவிபாலச்சந்திரன் சரோஜினி (322 கோவில் வீதி, நல்லூர்), செல்லையா கந்தையா (சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்), முத்தையா கிருஷ்ணன் (கனகச பாபதி பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்), பூமணி சித்திரவேல் (இளையதம்பி வீதி, அரியாலை), சந்திரதாஸ் சிவராணி (149, 5ஆம் குறுக்குத்தெரு, மணியம் தோட்டம், கொழும்புத்துறை), தம்பி சுப்பிரமணியம் (222(638), கண்டி வீதி, அரியாலை). (எ-ரி)

## சோளன் பொத்தி இலவச விநியோகம்

தொல்புரம் கமநல சேவைகள் திணைக்களம் தமது வளாகத்தில் பயிரிட்ட சோளம் பொத்திகளை பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகம் செய்து வருகின்றது.

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஏப்.27

ஏழாலை தம்புலத்தை ஞானவைரவர் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை சிவ.சண்முகவடிவேல் தலைமையில் திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறும்.

(எ-ரி)

## பிரிட்டிஷ் தூதர் நாளை திருமலை செல்கிறார்

திருகோணமலை,ஏப்.27

பிரிட்டிஷ் தூதர் ஸ்ரீபன் இவான்ஸ நான்குநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை திங்கட்கிழமை திருகோணமலைக்குச் செல்கின்றார்.

திருமலையில் அரச அதிகாரிகளைச் சந்தித்து மக்களின் புனர்வாழ்வு மற்றும் மீளகுடியமர்வுப் பணிகள் குறித்து ஆராயும் தூதர் மூதூர், சம்பூர் பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராயவிருக்கின்றார்.

சம்பூரில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் தூதர் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(எ-3)

### மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி ரத்து

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினால் இன்று (27.04.2003) நடத்தவிருந்த மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி மழை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

(17297) கழகத்தினர்.

### 2ஆவது உலக இந்து மாநாட்டையொட்டிய மாபெரும் இந்து கலாசார விழா-2003

காலம் :07.05.2003 - 10.05.2003 வரை(மாலை)

இடம் :சைவப் பணிமனை, இணுவில் கந்தசுவாமி கோயில், இளந்தொண்டர் சபை.

ஆரம்ப நாள் நிகழ்வில் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் கந்தசுவாமி கோயில்,
இளந்தொண்டர் சபை.

(17296)

### மீளாத் துயரில்...!

ஈழத்தமிழர் விடிவிற்காய் குரல் கொடுத்த பெரியார்
முன்னாள் யாழ்.மறைமாவட்ட ஆயர்

**மேதகு சேபஸ்தியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை**

அவர்கள் 25.04.2003 திகதி காலமானதையிட்டு எமது ஆழ்ந்த துயரத்தினையும் இதய அஞ்சலியினையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமுறுகண்டி பிள்ளையார்
ஆலய பரிபாலன சபையினர்.

*கிளிநொச்சி.* (17289)


### விற்பனையாளர்கள் தேவை

கண்ணாடி, பிளைவுட் வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர்களும் பழக விரும்பும் விற்பனையாளர்களும் தேவை.

த.குமாரசாமி அன் சன்ஸ்
248/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(17278)


### தவறவிடப்பட்டது

நேற்று (26.04.2003) சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மினி பஸ்ஸில் (ரோசா) ஹற்றன் பாடசாலை மாணவர்களுடன் சுற்றுலா வந்த ஆசிரியராகிய எனது கறுப்புநிற பெட்டி வடிவமான சதுரபாக் (*HAND BAG*) தவறிவிட்டது. அதில் சிறிய வீடியோ கமரா ஒன்றும் அதற்கான உபகரணங்களுடன் மிக முக்கியமான படங்கள் கொண்ட நாடாக்களும் உள்ளன. கண்டு எடுத்தவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அலுவலகத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு
தொ.பே.இலக்கம் :- 222-2827 (17284) J.O.L. RICHWAY

### 50ஆவது அகவையில் பாராட்டி வாழ்த்துகின்றோம்



மக்கள் சேவையில் மாண்பு பெற்ற
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரும்
யாழ்.Y.M.C.A தலைவருமாகிய

**உயர்திரு. சு.புத்திசிகாமணி**

அவர்கள் 27.04.2003 இல் அகவை 50இல் மேலும் பல சிறப்புகள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

அலுவலர்கள்
பிரதேச செயலகம்
பளை.

(17294)


### முகாமையாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல வியாபார ஸ்தாபனத்திற்கு நிர்வாகத் திறமையுடைய முகாமையாளர் தேவை. கணக்கியல், ஆங்கில அறிவுடையோராக இருத்தல் நன்று. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள், தொழில் துறை அனுபவங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல.1871
C/o உதயன்
யாழ்ப்பாணம்.

(C/275578)

### விற்பனைக்கு

லைனுடன் மொபிற்றல் மேசைத் தொலைபேசி, கூண்டும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
ரேக்கா ஓடியோ. வீடியோ சென்ரர்
நவாலி வீதி. ஆனைக்கோட்டை.
தொ.இல. :- 071-340436

(17291)

### லஷ்சுமி இணுவில்

ஸ்ரீகாந்த், பூமிகா,
ரகுவரன், ராதிகா, விவேக்
மற்றும் பலர் நடித்த
ரோஜாக் கூட்டம் (ரீலஸ்)
தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

(17231)

### நிறஞ்சனாஸ் சங்கானை

விஜய், சிநேகா நடித்த
வசீகரா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.00 (பு.நே.)
CROUCHING TIGER
HITDEN TRHEON

### நாகம்ஸ் சுன்னாகம்

விஜயகாந்த், சிம்ரன், ஸுஷ்மா, விவேக் நடித்த
ரமணா
தினசரி காட்சிகள் : (ரீலஸ்)
11.00, 3.00, 7.00 (பு.நே.)
29முதல் FIVE STAR

(17288)

### ராஜா யாழ்ப்பாணம்

1 ஆம் திகதிவரை
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன்,
ரோஜா, கிரன், வடிவேல்
அரசு
10.30, 2.30, 6.30, 9.30
அடுத்த வெளியீடு - கீதை

### லிபேட்டி அச்சுவேலி

சரத்குமார். சுரேஸ்கோபி. தேவயானி.
அபிராமி. நடித்த
சமஸ்தானம் (ரீலஸ்)
நாளை முதல் M.G.R நடித்த
இரகசிய பொலிஸ் 115
T.P. : 070 - 212223

(C/275581)


# மரண அறிவித்தல்கள்

## கனகசபை அரசரத்தினம்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கனகசபை அரசரத்தினம் (முன்னாள் தினபதி, டெயிலி மிரர் செய்தியாளர்) நேற்று (26.04.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெகதாம்பிகை (தாதி உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)யின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி,*
*தட்டாதெருசந்தி,*
*யாழ்ப்பாணம்.* (17300)

தகவல்:
அ.ஜெகதாம்பிகை
(மனைவி)

## அருட்பிரகாசம் சிவதாசன்

சுதுமலை மத்தி, மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்பிரகாசம் சிவதாசன் நேற்று (26.04.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருட்பிரகாசம் - கோகனதம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற கனகசபை (சட்டத்தரணி) - லீலாவதி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற வேதநாயகி (குடும்ப ஆலோசகர்) யின் அன்புக் கணவரும் விக்கினராஜா, முருகானந்தன் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை மத்தி,*
*மானிப்பாய்.* (17299)

தகவல்:
ஆனந்தன் (சகோதரன்)

## விக்டோறியா மகிழ்மலர் சுப்பிரமணியம்

எழுதுமட்டுவாழ் தெற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது இல.01, சோமசுந்தரம் லேன், சுண்டிக்குளியை வசிப்பிடமாகக் கொண்டவருமான விக்டோறியா மகிழ்மலர் சுப்பிரமணியம் நேற்று (26.04.2003) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சிவசோதி (ஜேர்மனி), செல்வமலர், சுகிர்தமலர் (ஆசிரியை, நவீல்ட் பாடசாலை, கைதடி), சுகந்தமலர் (ஜேர்மனி), சுகந்தராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வசந்தரா (ஜேர்மனி), சிறிறங்கன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் சிவப்பிரியா, ஹரிசன், டிக்றா ஆகியோரின் அன்புப் பாட்டியாரும் காலஞ்சென்ற சாமுவேல், செல்லம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஜெபரட்ணம், குணரட்னம் மற்றும் மல்லிமலர் ஜோசப் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை நாளை (28.04.2003) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு (புதியநேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொட்டடியிலுள்ள பெந்தகொஸ்த சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.01, சோமசுந்தரம் லேன்,*
*சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி இலக்கம் 0777 - 305533* (17298)

தகவல்:
சுகிர்தமலர்
(மகள்)

## கதிர்காமு கந்தப்பு (Post master)

கரவெட்டி மேற்கு,கஞ்சாம்பாதியினைப் பிறப்பிடமாகவும் லண்டனில் வசித்தவருமாகிய கதிகாமு கந்தப்பு (இளைப்பாறிய தபாலதிபர்) அவர்கள் 23-04-2003 புதன்கிழமை லண்டனில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - பத்தினிப்பிள்ளையின் இளைய மகனும் காலஞ்சென்ற பொன்னையா (தலைமை ஆசிரியர்)வின் அன்புச் சகோதரரும் திருமதி வள்ளியம்மை (லண்டன்)யின் அன்புக் கணவரும் பத்மநாதன் (பொறியியலாளர்-இந்தியா), இராமச்சந்திரா (உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம்), பரம்சோதி (லண்டன்), திருமதி புவனசுந்தரி (ஜேர்மனி), திருமதி பாலசரஸ்வதி (இந்தியா), நித்தியானந்தன் (கனடா), பத்மினிதேவி (ஜேர்மனி), வைஜெயந்திமாலா (லண்டன்), பாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வீரகத்தி காலஞ்சென்றவர்களான பொன்னையா, நடராசா ஆகியோரின் மைத்துனரும் நிமலராஜா, தவரத்தினம், சிதம்பரநாதர், வரதநாதன், மனோரஞ்சிதமலர், மாலினி, வளர்மதி, புஸ்பமலர், சத்தியவதி ஆகியோரின் மாமனாரும் அசோகன் (JOURNALISM, UNIVERSITY OF GERMANY), காயத்திரி, அபிராமி, மயில்மாறன், மகேஸ்வரி, ஜனனி, நேர்த்திகா, பிரதீபன், குமரன், வேந்தன், விவேகன், கௌசல்யா,மயூரன் ,சௌமியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2003) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***39, Watermed Road,***
***Caiford,***
***SE 63 DL,***
***London.*** (17282)

தகவல்:
க.இராமச்சந்திரா (பாலா),
*கஞ்சாம்பாதி,*
*கரவெட்டி மேற்கு, கரவெட்டி.*

## திருமதி அமுதம்மா அரியரட்ணம்

***(வர்த்தலைவிளான்)***

தெல்லிப்பழை, வர்த்தலைவிளானைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி அமுதம்மா அரியரட்ணம் நேற்று (26.04.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அரியரட்ணத்தின் அன்பு மனைவியும் கணேசலிங்கம் (உரிமையாளர், நிலா நகைமாடம்,யாழ்.), அமுதலிங்கம் (சாரதி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சறோஜினிதேவி, கனகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் சர்மிளா, சுகீதன், சுவர்ணன், அமுதகலா, அமுதவிகாஸ், அமுதினி, அமுதராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*'கல்கி இல்லம்'*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.* (17295)

தகவல்:
அ.கணேசலிங்கம்,
அ.அமுதலிங்கம்
(மகன்மார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகர சபைக்குள் மீளக் குடியமர்ந்தோர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண திட்டம்

## நேற்றுமுதல் நடைமுறையில்

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ். மாநகரசபைப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அவசர புனர்வாழ்வுத் திட்டம் ஒன்று நடைமுறைக்கு வந்துள்ளது.

மீளக் குடியமர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களைத் திருத்துவதற்கு உடனடி உதவிகளை வழங்க வசதியாக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் செபத்மநாதன் மற்றும் செயலக அதிகாரிகள் இணைந்து, இனங்காணப்பட்ட பிரதேசங்களில் மக்கள் சேவைகளை நடத்தி மக்கள் தேவைகளுக்கு உடனடி உதவிகள் வழங்க ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

கொழும்புத்துறை, அரியாலை ஆகிய பகுதிகளில் அரச அதிபர் தலைமையில் நேற்று நடத்தப்பட்ட மக்கள் சேவையில், மக்கள் தெரிவித்த முறைப்பாடுகளுக்கு உடன் தீர்வு காணப்பட்டது.

இதே போன்ற மக்கள் சேவை இன்று குருநகர், நாவாந்துறைப் பகுதிகளில் நடத்தப்படவிருக்கின்றது. (ம-3)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடை ஒன்றுக்குச் சென்றார். அச்சமயம் ஓட்டோவில் வந்த இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் உயிரிழந்தார். இச்சம்பவத்தில் கடையில் பொருள்கள் வாங்க வந்த ஒருவரும் காயம் அடைந்தார்.

உயிரிழந்த தேவராசா கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தின் துணைப் படையில் இணைந்து செயற்பட்டு புலனாய்வுப் பணிகளில் ஈடுபட்டுவந்தார் எனக் கூறப்பட்டது. அண்மைக் காலத்தில் கொழும்பில் புலனாய்வுப் பிரிவை சேர்ந்தவர்கள் மீது நடத்தப்பட்ட 5ஆவது தாக்குதல் சம்பவம் இது எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-3)


## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ் வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வு காணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!

**மணிசாமி**

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி

இல. 54, மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்)

பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.

(17280)

## இந்திய பரம்பரை ஜோதிடர்



அருள்வாக்கு

**அம்பிகா அம்மா**



மீண்டும் யாழ்.
புண்ணிய பூமிக்கு வருகை.

கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.

- திருமணத் தடங்கலா?
- காதல் தோல்வியா?
- தீராத வியாதியா?
- உயர் கல்வியில் தடங்கலா?
- கடன் தொல்லையா?
- தொழில் முன்னேற்றத்தடங்கலா?
- புதிய தொழில் தொடங்க வேண்டுமா?
- குழந்தைப் பாக்கியம் இல்லையா?
- செய்வினை, பில்லி சூனியம்.

இது போன்ற எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் கவலை வேண்டாம். உடனே அம்மாவைச் சந்தியுங்கள். நன்மை அடையுங்கள்.

அம்மாவைச் சந்திக்கும் இடம்:-

**அருள்வாக்கு அம்பிகா அம்மா**

மடோனா லொட்ஜ்

121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

ஸ்ரீமுருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்

(17212)


# சமகால அரசியல் விளக்கக் கூட்டம்

சமகால அரசியல் நிலை குறித்து கத்தோலிக்கக் குருமார் மற்றும் கன்னியாஸ்திரிகளுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் யாழ். 'கியூடெக்' அலுவலகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா, துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தங்கன், மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் பவா, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் உரையாற்றினர். (ம-3)

## இலவச மருத்துவ முகாம்

தீவக லயன்ஸ் கழகமும் யாழ். வேணி களஞ்சியமும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் மற்றும் கண்பரிசோதனை முகாம் என்பன இன்று காலை 9.00 மணி முதல் கைதடி வடக்கில் உள்ள ஸ்ரீசச்சிதானந்தா ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும்.

வசதி குறைந்த நோயாளர்களுக்கு கண்பரிசோதனையின் பின்னா இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும வழங்கப்படவுள்ளன. (ம)

## மதுரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் முதலாம் திகதி கொழும்பு வருகிறார்.

இந்து மாநாட்டை முடித்துக் கொண்டு எதிர்வரும் 6ஆம் திகதி யாழ் வரும் சுவாமிகள் 10 ஆம் திகதி வரை தங்கிநின்று பல இடங்களுக்கும் சென்று மக்களுக்கு ஆசிவழங்கவுள்ளார். தமிழகத்தில் இருந்து ஆதீன மட்டத்தில் யாழ். வரும் முதலாவது சுவாமி இவராவார். (ம-3)

## வாகனங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளில் செல்பவர்களைக் கைது செய்ய இருக்கின்றனர்.

கைது செய்யப்படுபவர்களை உடன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

கடந்த 21 ஆம் திகதிமுதல் சமாந்தரமான பவனிக்கு தடைவிதிக்கப்பட்ட போதும், தொடர்ந்தும் சமாந்தரமான பவனியில் மக்கள் ஈடுபடுவதால அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைத் தொடரவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேரவையின் செயற்பாடுகளை முன்னெடுக்க கிராமம், பரதேசம், கோட்டம், மாவட்டம் தோறும் வழிநடத்தல்குழு, நடைமுறைப்படுத்தல் குழு என்பன அமைக்கப்பட்டன.

ஊரகம், பிரதேசம், கோட்டம், மாவட்டம் என பேரவையின் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டு கிராம மட்டத்தில் இருந்து தேசப்பற்று மிக்க கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, மனித நேயம் போன்ற சிறந்த விழுமியங்களை உடைய கொள்கையாளர்களை பேரவையின் உறுப்பினர்களாக்கி குறிக்கோளை நிறைவேற்ற பாடுபடுவோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.(ம-3)

# ஆசிய அபிவிருத்தி வங்கியால் இலங்கைக்கு ரூ. 8,000 கோடி

யாழ்ப்பாணம்,ஏப்.27

இலங்கையின் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைப்பதற்காக 8 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான நிதி உதவிகளை இலங்கைக்கு வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி ஆலோசித்து வருகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி இயக்குநர் ஜோசப் செல்கீஸ் இதனைத் தெரிவித்தார்.

எனினும், அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றம் தென்பட்டால் மட்டுமே இப்பணத்தினை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றினைத் தாம் அவதானித்து வருவதாகவும் ஜோசப் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

இந்த நிதி உதவிகள் 4 வருட காலத் திட்டத்தின் அடிப்படையில் வழங்கப்படும் எனத் தெரிகிறது. ஆண்டுக்கு 2,000 கோடி ரூபாப்படி கிடைக்கும் என்று இலங்கை அதிகாரிகள் கூறுகின்றனர். (ம-12)

## பிரதமரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பியுள்ளார் எனக்கூறப்பட்டது.

நேற்று யாழ்ப்பாணம் வந்த பிரட்மன் வீரக்கோன், பலாலியில் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

யாழ்.செயலகத்தில் இன்று காலை 9.30 மணிக்கு பொதுமக்களின் பிரதிநிதிகள், புத்திஜீவிகள் ஆகியோரை அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

குடாநாட்டில் நிலவும் பல தரப்பட்ட பிரச்சினைகள் குறித்து அவர் கேட்டறிவார்.

உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகள், மக்கள் மீள் குடியமர்வில் உள்ள நெருக்கடிகள் தொடர்பாக அவருக்கு எடுத்துக் கூறப்படவிருக்கின்றது.

இந்தக் கூட்டத்துக்கு முன்னர், முன்னாள் யாழ்.ஆயர் தியோகுப்பிள்ளையின் இறுதிக் கிரியைகளிலும் பிரட்மன் பங்குபற்றவிருக்கின்றார். (ம-3)

## பளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் இக்கேடயம் எடுத்துச் செல்லும நிகழ்வு நாளை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்நிகழ்வுகளையொட்டி பளை தமிழீழ காவல்துறை நிலையத்தில் இருந்து விழா இடம்பெறும் இடம்வரை இரண்டரைக் கிலோமீற்றர் தூரம் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலமாகக் காட்சியளிக்கின்றது.

தமிழீழமெங்கும் இருந்து மக்கள் அலைஅலையாக வந்து வெற்றிவிழாவில் பங்கேற்கவிருக்கின்றனர்.

குடாநாட்டில் இருந்து செல்பவர்களுக்கு இலவச போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சகல திணைக்களங்கள், வர்த்தகர்கள், மாணவர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானவர்கள் எழுச்சியுடன் பங்கேற்கவிருக்கின்றனர்.

இந்த நிகழ்வையொட்டி குடாநாட்டில் சகல வாகனங்களுக்கும் வெற்றி விழாப்பதாகைகள் கட்டப்பட்டுள்ளன. வர்ணச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இந்த வெற்றிவிழா தொடர்பான செய்திகளைத் திரட்டுவதற்காக தெற்கிலிருந்து பெரும் எண்ணிக்கையான செய்தியாளர்கள் பளைக்குப் படையெடுத்துள்ளனர்.

(ம-3-15-70-173-30)


## சாரதி அனுமதிப் பத்திரம்

**சிறந்த, மிகவும் குறுகிய காலத்தில் பயிற்சியளிக்கப்பட்டு விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும். அத்துடன், சாரதி அனுமதிப்பத்திரமில்லாமல் வாகனம் ஓட்டுபவர்களுக்கு கனரக வாகனங்களுக்கானது (BUS) ஒருகிழமையிலும், பாரம் குறைந்த வாகனங்களுக்கானதும் (VAN, CAR) மோட்டார் சைக்கிளுக்கானதும் நான்கு நாள்களிலும் சாரதி அனுமதிப்பத்திரம் உடனடியாக கொழும்பில் பெற்றுக்கொடுக்கப்படும்.**

- யாழ்.மாவட்டத்திலிருந்து வருபவர்களுக்கு கொழும்பில் தங்குமிடம் இலவசம்.
- பூரணமான விளக்கத்துடன் வீதி ஒழுங்கு சம்பந்தமான வகுப்புகளும எழுத்துப் பரீட்சைகளுக்கான தயார்ப்படுத்தல் வகுப்புகளும் நடைபெறும்.

தொடர்பு:-

**க.ரூபன்**

யுனிவேர்சல் சாரதிப் பயிற்சி நிறுவனம்
44B, 1ᵗʰமாடி, ஸ்ரீகதிரேசன் வீதி,
கொழும்பு - 13
T.P. No. : 071 298551, 0777 750023

(C/27546)


## மறைந்த ஆயருக்கு எம் இதய அஞ்சலிகள்



தெளிவான சிந்தனையும் தூர நோக்கும்
தளராத உறுதியும் திடமான செயலுமுடையோனாய்
அமரராகியுள்ள எம் முன்னாள் ஆயர்ப் பெருந்தகை
வ.தியோகுப்பிள்ளை ஆண்டகைக்குச் சமர்ப்பிக்கின்றோம்
எம் இதய அஞ்சலிகளை.

இருபது வருடங்கள் யாழ் மறை மாவட்டத்தின் ஈடிணையற்ற ஆயராய் ஆற்றிய பணிகளை மறவோம். பெரும் சவால்கள், எதிர்ப்புகள், தடைகள் மத்தியிலும் தனித்து நின்று காலத்தின் தேவையுணர்ந்து துணிந்து செயலாற்றி புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி இம் மண்ணில் உதயமாகி வளர்ந்தோங்கிடத் தன்னையே உரமாக்கியோன்.

தமிழ் மக்கள் எம் அவலங்களில் இரண்டறக் கலந்து எம் உரிமைக்காக என்றும் குரல் கொடுத்தோன். கொடிய போர் மத்தியிலும் யாழ். மண்ணை விட்டு இடம்பெயராது மக்களின் துன்பங்களில் தன்னையும் இணைத்தோன். கத்தோலிக்க மறையினதும், தமிழ்க் கலையினதும் காவலனாய்த் திகழ்ந்தோன்.

எமது குருமடத்திற்கு வேராகி, உரமாகி, நீராகி, வெளிச்சமாகி, மரமாகி, எமக்கெல்லாம் நிழலாகி மறைந்துபோன எம் முதல் வழிகாட்டி ஆயர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகைக்கு எம் கண்ணீர்களைச் செபங்களாகக் காணிக்கையாக்குகின்றோம்.

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (17283)

புனித சவேரியார்
குருமடக் குடும்பம்.




மீண்டும் வந்துவிட்டது

விருப்பு வர்ணத்திற்கு முந்துங்கள்

HERO HONDA World No. 1 Two-Wheeler Company

SPLENDOR

2 Year warranty

Two - Wheeler Company

RG

## இரத்தின கோர்பால்ஸ்

63,65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

T.P.:- 0777 340056

(சி-27579)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org